வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 27.01.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 49 | பக்கங்கள் : 16



இந்தியாவின் 74ஆவது குடியரசு தினம் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள அந்த நாட்டின் துணைத்தூதரகத்தில் இடம்பெற்றவேளை துணைத்தூதுவர் இந்திய தேசிய கொடியை ஏற்றிவைத்தபோது...!
(தொடர்புடைய செய்தி - பக்கம் 14 இல்)

# சர்வகட்சி கூட்டத்தை நேற்று புறக்கணித்தது கூட்டமைப்பு

## கைதிகள், காணிகளை விடுத்தால் மாத்திரமே இனி அதில் பங்கேற்போம் என்கிறார் செல்வம்

மன்னார், ஜன. 27

காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை என்ற எமது கோரிக்கைகளை நிறைவு செய்தால் மட்டுமே எதிர்வரும் காலங்களில் நடைபெற இருக்கும் சர்வகட்சி கூட்டங்களில் கலந்துகொள்வோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் இனப் பிரச்னை தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் இன்று (நேற்று) நடைபெறுகின்ற சர்வகட்சி கூட்டத்தில் நான், பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை.

15



# கோப்பாயில் குடும்பஸ்தர் கொலை மனைவி உட்பட ஒன்பது பேர் கைது!

## குடும்பமாக கொன்றுவிட்டு நாடகமாடியதும் அம்பலம்!

யாழ்ப்பாணம், ஜன. 27

இளம் குடும்பஸ்தரை மனைவி உள்ளிட்ட குடும்பத்தினரே அடித்துக் கொன்றுவிட்டு, வாள்வெட்டுக் குழு வந்து கொன்றுவிட்டதாக நாடகமாடியது பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கடந்த 21 ஆம் திகதி இரவு கோப்பாய் மத்தியில் ரவீந்திரன் அஜித் (வயது 30) என்ற ஒரு

15

# மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரம்; ஆளும் தரப்புகளே எதிர்ப்பு!

- 13ஐ முழுமையாக அமுலாக்குவேன் - ரணில்
- 3ஆம் திகதிக்கு முன் காணிகள் விடுவிப்பு
- தீர்வு குறித்து பாராளுமன்றுக்கு பெப். 8 அறிக்கை!
- இன்னும் இரு கூட்டங்களில் தீர்வு வழங்கப்படும்

கொழும்பு, ஜனவரி 27

மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்குவதற்கு ஆளும் தரப்பினர் சிலரே நேற்றைய சர்வகட்சி கூட்டத்தில் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின்பேரில் நேற்றைய தினம் சர்வகட்சி கூட்டம் நடைபெற்றது.

15

# வட்டிக்கு பணம் வாங்கியவர்களை துன்புறுத்தும் கும்பல் அடையாளம்!

## பொலிஸ் அதிகாரிக்கும் தொடர்பாம்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணத்தில் மீற்றர் வட்டிக்கு பணம் வாங்கியவர்களிடமிருந்து பணத்தை வசூலிக்க அவர்களை அடித்துத் துன்புறுத்திய சம்பவத்துக்கும், சுன்னாகம் கொலை முயற்சி மற்றும் வன்செயல்களுடனான தொடர்பில் சரணடைந்த மூவருக்கும் தொடர்பு உள்ளமை பொலிஸ் உயர் மட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், இந்த மீற்றர் வட்டி கும்பலுக்கும் சுன்னாகம் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கும்

15

# வட்டிக்கு பணம் வாங்கியவரை தாக்கிய நபர் நேற்று கைதானார்!

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணத்தில் மீற்றர் வட்டிக்கு பணம் கொடுத்தவர்களிடம் பணத்தை மீள வசூலிப்பதற்காக அடித்து துன்புறுத்தியவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அளவெட்டியைச் சேர்ந்தவர் என்று அறியவருகிறது. இவரை யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த நபர் மீற்றர் வட்டிக்கு பணம் பெற்றவர்களை அந்தப் பணத்தை வசூலிப்பதற்காக கடுமையாக தாக்கிய காணொலிகள் அண்மையில் சமூகவலைத்தளங்களில் பிரபலமானமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இந்தக் காணொலிகள் ஒன்

15

# மின்வெட்டு நடைமுறைக்கு இனி அனுமதி வழங்கப்படாது!

## பொது பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 27

உயர்தரப் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு மின்வெட்டு கோரிக்கைக்கும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்காது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்று முதல் இது எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி வரை மின்சாரம் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டும் என்று ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

15

## தமிழ் அரசியல் கைதி:

# 12 வருடங்களின் பின்னர் நிரபராதியென விடுதலை!

மன்னார், ஜன. 27

குற்றம் எதுவும் நிரூபிக்கப்படாத நிலையில் 12 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி நேற்று விடுதலை செய்யப்பட்டார்.



சிவசுப்பிரமணியம்

15

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023
தமிழ் தேசிய கூட்டமைப்பு
தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

தமிழரசுக் கட்சியில் பல குழுக்கள் இருப்பது தெரிந்த சங்கதி தான். கட்சித் தலைவர் மாவை கட்சியில் பலம்பெருந்திய ஆளாக இருந்தபோது அவரைச் சுற்றி ஒரு குழு இருந்தது. சம்பந்தனை சுற்றி ஒரு குழு அதேவேளை, கிளிநொச்சியில் தனி ஆளாக சிறீதரன். அப்படி பலர்.

மாவையின் தலைமை பலவீனமடையத் தொடங்க அவரோடு நின்றவர்கள் பலர் இப்போது சுமந்திரன் அணியில். அவர் சம்பந்தன் அணியில் இருந்து வெளியே வந்து தனி அணியாகி பல மாதங்கள் ஆகின்றன.

சம்பந்தனுக்கு பின்னர் யார் கட்சித் தலைமைக்கு வருவர்கள் என்ற பில்லியன் டொலர் கேள்வி பலரிடம் இருக்கின்றது.

சுமந்திரன் தலைமைக்கு வர முயன்றாலும் யாழ்ப்பாணத்தில் மக்கள் செல்வாக்கு சிறீதரனுக்குத்தான் இருக்கிறதாமே என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்கும் அளவுக்கு அவர்கள் இருவரின் உள்கட்சி மோதல் பிரபலமானது.

சுமந்திரன் தன்னை ஒரு முன்னணி சட்டவாளராக காட்டிக்கொண்டு, தனக்கிருக்கும் அந்த புலமையை வைத்துக்கொண்டு கட்சியில் முதலிடத்தைப் பிடிக்க தீவிர முயற்சியில் இருக்கிறார்.

'அவரைவிட வேறு யார் கட்சியில் விசயம் தெரிந்தவர்கள்' என்று சில புத்திஜீவிகளே இந்த ஊர்க்குருவியிடம் கேட்டிருக்கின்றனர்.

கொரிய தூதுவர் ஒரு தடவை யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரோடு பேசியபோது அவர் சொன்னது இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

'உங்கள் நாட்டில் சட்டம் தெரிந்தவர்கள் மாத்திரம்தான் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். அவர்கள் வேண்டுமானால் நீதிமன்றத்தில் இருக்கலாம். ஆனால், பொருளாதார அறிவு உள்ளவர்கள் பாராளுமன்றத்தில் இல்லாததால்தான் நாடு இன்னமும் இப்படி இருக்கின்றது' என்றார் அவர்.

உண்மைதான், வேலன் சுவாமிகள் அண்மையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, ஒரு சட்டத்தரணியாக சுமந்திரன் ஆஜராகி அவரை பிணையில் எடுத்தபோது, ஏதோ சுமந்திரனால்தான் அவர் பிணையில் விடப்பட்டதுபோலவே நமது மக்கள் பேசிக்கொண்டனர். தினமும் பல கிரிமினல் குற்றச்சாட்டுக்கு உள்ளான பலரை 'நேற்று கோட்டுப்போட்ட' சட்டத்தரணிகள் நீதிமன்றில் பிணையில் எடுக்கின்ற சங்கதி அவர்கள் தெரியாதது.

ஒரு சட்டத்தரணி, பிணையில் எடுத்ததுசரி, அவர் ஓர் அரசியல்வாதியாக இதுபோன்ற கைதுகளே நடக்காமல் பார்க்க முடியவில்லை.

இதுவல்ல, நாம் இன்று சொல்ல வருவது.

தமிழரசுக் கட்சி இந்த உள்ளூராட்சி தேர்தலுக்காக மாவட்டம் தோறும் தமது கட்சியின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களாக ஒவ்வொருவரை நியமித்தது. கிளிநொச்சிக்கு சிறீதரன், யாழ்ப்பாணத்துக்கு சுமந்திரன், மட்டக்களப்புக்கு சாணக்கியன், முல்லைத்தீவுக்கு சிவமோகன் என்று.

அந்த நியமனங்களுக்கு உரிய கடிதங்கள் கட்சி செயலாளரால் எழுதப்பட்டு மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ஒப்படைப்பதற்காக அவரவர்களிடம் வழங்கப்பட்டது. உரிய நேரத்திலேயே இவர்களுக்கான கடிதங்கள் அவரவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஆனால், யாழ். மாவட்டத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட முகவராக நியமிக்கப்பட்ட சுமந்திரன் அதற்கான கடிதத்தை அலுவலகத்தில் உரிய நாளுக்கு முன்னதாக ஒப்படைக்கவில்லை. சட்டம் தெரிந்த அவருக்கு அதனை உரிய நேரத்தில் கொடுக்கவேண்டும் என்பது தெரிந்திருக்கவில்லை.

உரிய நேரத்தில் அது ஒப்படைக்கப்படாததால், தமிழ் அரசுக்கு இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர் இல்லை.

இதனால் கடந்த வாரம் வேட்பாளர் நியமனப் பத்திரத்தை யாழ். மாவட்ட செயலகத்தில் ஒப்படைப்பதற்காக கட்சியின் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம் வவுனியாவிலிருந்து வரவேண்டியிருந்தது.

அதனால்தான் அன்று நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் அறைக்குக்கூட சுமந்திரனால் உள்ளே போகமுடியவில்லை. சத்தியலிங்கம் ஒரு வேட்பாளருடன் மாத்திரமே உள்ளே சென்று நியமனப் பத்திரத்தை தாக்கல் செய்துவிட்டு வெளியே வந்தார்.

இனி வாக்களிப்பு நிலையங்கள், வாக்கு எண்ணும் நிலையங்களுக்கான ஆட்களை நியமிக்கவும் வவுனியாவிலிருந்து சத்தியலிங்கம் வரவேண்டிய நிலை.

யாழ்ப்பாணத்தில் முகவர் இல்லாததுதான் பிரச்னை. ஆனால், திருகோணமலையில் வேட்பாளர் நியமனங்களின் போது நடந்த இழுபறிகள் கட்சியின் பெருந்தலைவருக்கே அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறதாம். 'நான் கொண்டுவந்தவர்களே என் முதுகில் குத்திவிட்டார்கள்' என்று அவரை கூறவைத்திருக்கிறதாம்.!

- ஊர்க்குருவி

# ஊழலற்ற நிர்வாகத்தை தருவோம் என்போரே ஊழல் செய்கின்றனர்!

## முன்னணியின் யாழ். மாநகர மேயர் வேட்பாளர்

யாழ்ப்பாணம், ஜன. 27

ஊழலற்ற நிர்வாகத்தை நாங்கள் தருவோம் என்று கூறிக்கொண்டு வரும் ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொரு முறையும் வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றியிருக்கிறார்கள்.

ஆனால், ஊழல்களைப் புரிந்தவர்கள்தான் ஊழலற்ற நிர்வாகத்தை வழங்குவோம் என்று பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வருகிறார்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர சபை முதல்வர் வேட்பாளர் தீபன் திலீசன் தெரிவித்துள்ளார்.

கொக்குவிலில் அமைந்துள்ள அவரின் கட்சியின் தலைமைப் பணிமனையில் நேற்று காலை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த செய்தியாளர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக் கட்சியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், முன்னணியின் யாழ். மாநகர சபை துணை முதல்வர் வேட்பாளரும் உறுப்பினருமான வைத்தியலிங்கம் கிருபாகரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

(ஐ)

# இலங்கையின் வளர்ச்சியில் இந்தியாவே பிரதான பங்காளி!

## சபாநாயகர் மகிந்த யாப்பா



கொழும்பு, ஜன. 27

இலங்கையின் வளர்ச்சியில் பல்வேறு வழிகளிலும் பிரதான பங்காளியாக இந்தியா திகழ்கின்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 75ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த உறவுகள் மேலும் வலுப்பெற வேண்டும் என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 74ஆவது குடியரசு தினம் நேற்று கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், இலங்கையின் பங்காளியாகவே இந்தியா செயல்பட்டு வருகின்றது. இலங்கை சவால்களை எதிர்கொள்ளும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்தியா துரிதமாக பதிலளித்தது. கடந்த ஆண்டு முன்னெப்போதும் இல்லாதவாறு இந்தியா 400 கோடி டொலர் பெறுமதியான கடன் மற்றும் ஏனைய உதவிகளை இலங்கைக்கு வழங்கியது.

இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டில் முதலாவதாக கடன் மறுசீரமைப்புக்கு இணங்குவதாக எழுத்து மூலம் சர்வதேச நாணய நிதியத்திற்கு இந்தியா அறிவித்தது. இந்தியாவின் ஒத்துழைப்புக்கள் இலங்கை மக்களுக்கு மிகவும் உதவியாக அமைந்துள்ளன. அவற்றில் சுவசெரிய அம்புலன்ஸ் சேவையைக் குறிப்பிட்டுக் கூற முடியும்.

இதேபோன்று கோவிட் தொற்று தீவிரமடைந்த காலப்பகுதியிலும் தடுப்பூசிகளை வழங்கி இலட்சக்கணக்கான மக்களின் உயிரை காப்பாற்றுவதற்கு இந்தியா வழங்கிய தடுப்பூசிகள் ஏதுவாய் அமைந்தன. இந்தியா இலங்கையின் மிகப் பெரிய முதலீட்டு ஆதாரமாகவும் திகழ்கின்றது.

அத்தோடு வர்த்தக பங்காளியாகவும் விளங்குகிறது. மேலும் சுற்றுலாத்துறையிலும் முதலீட்டு ஆதாரமாகவும் இந்தியா விளங்குகிறது. இவ்வாறு பல்வேறு வழிகளிலும் இலங்கையின் வளர்ச்சியில் பிரதான பங்காளியாக இந்தியா காணப்படுகிறது. இவ்வாண்டு இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையிலான இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றன.

இந்திய மற்றும் இலங்கை மக்களுக்கிடையில் இந்த உறவு தொடரும் என்று நம்புகின்றோம். இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்புக்களும் இதன் மூலம் மேம்படுத்தப்படும். பிரதமர் நரேந்திர மோடியின் அயல் நாட்டுக்கு முதலிடம் கொள்கையின் அடிப்படையில் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் மேலும் வலுப்பெற்றுள்ளன.

ஜி-20 மாநாட்டுக்கு இந்தியா வெற்றிகரமான தலைமைத்துவத்தை வழங்கும். பிரதமர் மோடி தெற்காசிய நாடுகளுக்காக குரல் கொடுக்க வேண்டும். 74 ஆவது குடியரசு தினத்தைக் கொண்டாடும் இலங்கைக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றார். (ஐ)

# சுன்னாகம் வாள்வெட்டு குழுவுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை!

## செய்தியாளர் சந்திப்பில் சுகாஷ்

யாழ்ப்பாணம், ஜன. 27

சுன்னாகத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. நான் எந்த விதத்திலும் அந்த வழக்குடன் சம்பந்தப்படவில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளரும் சட்டத்தரணியுமான க. சுகாஷ் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொக்குவிலிலுள்ள அவரின் கட்சிப் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுன்னாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரு குழுக்கள் வன்செயல்களில் ஈடுபட்டன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் தமது சட்டத்தரணி மூலம் நேற்று முன்தினம் இரவு பொலிஸில் சரணடைந்தனர். இந்த நிலையில், சட்டத்தரணி சுகாஷ் ஊடாகவே அவர்கள் பொலிஸில் சரணடைந்தனர் என்று தகவல்கள் பரவியிருந்தன. இந்நிலையிலேயே இதனை சுகாஷ் மறுத்துள்ளார்.

மேலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர மிகுதி அனைத்து கட்சிகளும் ஒற்றை ஆட்சிக்குள் தீர்வை ஏற்பதற்கு உடன்பட்டு உள்ளன. இந்த நிலையில் தமிழ் மக்களின் அபிலாசையான சமஷ்டியை வலியுறுத்தும் ஒரேஒரு கட்சியாக முன்னணி மட்டுமே செயல்படுகின்றது. வெளிநாடுகளின் செயல்பாடுகளுக்கு ஒத்துப்போகாதுள்ள கட்சி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாகும் - என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
27.01.2023 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், தை 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கூட்டமைப்பின் பிளவுக்கான காரணம்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூட்டமைப்பில் ஏற்பட்ட உடைவுக்கு சுமந்திரனே காரணமென்று தெரிவித்திருகின்றார். சுமந்திரன் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவது இது முதல் தடவையல்ல - ஆனால், தமிழரசு கட்சி வெளியேறிருக்கின்ற நிலையில், இவ்வாறானதொரு குற்றச்சாட்டு பகிரங்கமாக முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

தேசிய பட்டியல் மூலம், 2010இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலுக்குள் பிரவேசித்த எம். ஏ. சுமந்திரன், 2015இல் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அதன் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இரா. சம்பந்தன் இருந்தாலும்கூட, சுமந்திரனே கூட்டமைப்பை இயக்கும் பிரதான நபராக இருந்தார். 2015 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கூட்டமைப்பின் சகல முடிவுகளிலும் சுமந்திரனே பிரதான பங்குவகித்தார். சுமந்திரன் அவ்வாறு செயல்படுவதற்கான அனைத்து வாய்ப்புகளையும் சம்பந்தன் வழங்கியிருந்தார். சுமந்திரன் அவ்வாறு செயல்படும்போது பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் அதனை அனுமதித்துக் கொண்டுதான் இருந்தனர். சுமந்திரனுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முற்படவில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் கூட்டமைப்பின் பிரச்சினைகளுக்கான பிரதான சூத்திரதாரி சம்பந்தனே ஆவார். ஏனெனில், சம்பந்தன் தலைமைப் பொறுப்பை சரியாக நிறைவேற்றியிருந்தால் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கும் தமிழரசு கட்சிக்கும் இடையில் பெரியளவில் விரிசல்கள் ஏற்பட்டிருக்காது. இலங்கை தமிழரசு கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து வெளியேறிய பின்னர் சம்பந்தன் முற்றிலும் கூட்டமைப்பின் தலைவராகவே இருந்தார். ஆனாலும், சம்பந்தன் கூட்டமைப்பின் தனித்துவம் வளர்ச்சி தொடர்பில் சிந்தித்து செயல்படவில்லை. கூட்டமைப்பின் தலைவர் பொறுப்பின் மூலம் கிடைத்த அனைத்து வாய்ப்புகளையும் சலுகைகளையும் அனுபவித்துக் கொண்டே மறுபுறமாகக் கூட்டமைப்பின் வளர்ச்சிக்கு எதிராகவே செயல்பட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் விரிசல்கள் அதிகரித்து சென்றது. 2020 தேர்தலில் சுமந்திரன் தொடர்பான முரண்பாடு உச்சநிலையை அடைந்தது. அதுவரையில் கூட்டமைப்பின் பிரச்னையாக மட்டுமேயிருந்த விடயம் தமிழரசு கட்சிக்கான சிக்கலாகவும் மாறியது. சுமந்திரனுக்கு எதிராக தமிழரசு கட்சிக்குள்ளும் அணிகள் உருவாகின. இப்போது தமிழரசு கட்சி தனியாக சென்றிருக்கும் நிலையில், மீளவும் சுமந்திரன் மீதே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால், ஏதேவொரு வகையில் சுமந்திரன் தமிழ் அரசியல் பரப்பில் பேசுபொருளாகவே இருந்து கொண்டிருக்கின்றார்.

குற்றச்சாட்டுகளுக்கு அப்பால், தேர்தலில் ஒவ்வொரு கட்சிகளுக்கும் தங்களின் செல்வாக்கை நிரூபிக்க வேண்டிய தேவையுண்டு. ஒரு கட்சி மக்கள் மத்தியில் பெறும் செல்வாக்கானது. அனைத்து குற்றச்சாட்டுக்களையும் இல்லாமலாக்கிவிடக் கூடியது. எனவே தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்குபவர்கள் தங்களின் மக்கள் செல்வாக்கை நிரூபிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

2009இலிருந்து தமிழ் மக்கள் ஏதோவொரு வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தொடர்ந்தும் ஆதரித்து வந்திருக்கின்றனர். 2020 பொதுத் தேர்தலின்போது, இந்தப் போக்கில் முதன்முதலாக பெரியதொரு வீழ்ச்சியேற்பட்டது. கூட்டமைப்பின் உள் முரண்பாடுகள் தொடர்ந்தும் தமிழ் மக்கள் மத்தியில் பேசுபொருளாகிக் கொண்டிருந்த சூழலில்தான், கூட்டமைப்பின் மீதான அதிருப்தியும் அதிகரித்தது. கூட்டமைப்பின் மீதான அதிருப்தியே விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் வெற்றிபெறுவதற்கான காரணமாகியது. தவிர, அவர்கள் மீதான நம்பிக்கையினாலோ அல்லது ஈர்ப்பினாலோ அவர்களை மக்கள் ஆதரிக்கவில்லை. இது தேர்தல்களின்போது இடம்பெறும் ஒரு சாதாரண விடயம்தான். பிரதான கட்சியின்போது, மக்கள் அதிருப்தியடையும் சந்தர்ப்பங்களில் மக்கள் இயல்பாகவே தங்களின் வெறுப்பைக் காண்பிக்க பிறிதொரு கட்சியை தெரிவு செய்வார்கள் அல்லது வாக்களிப்பை தவிர்ப்பார்கள். 2020 பொதுத் தேர்தலின்போது, கூட்டமைப்பின் மீதான தங்களின் அதிருப்தியை காண்பிப்பதற்காக ஏனையவர்களுக்கு வாக்களித்தனர். இவ்வாறானதொரு சூழலில்தான் கூட்டமைப்பில் மேலுமோர் உடைவு ஏற்பட்டிருக்கின்றது. இந்த விடயமும் மக்கள் மத்தியில் நிச்சயம் அதிருப்தியை ஏற்படுத்தும். இப்போது மக்கள் எவர் மீது கோபம் கொள்வார்கள்?

## கஞ்சா கடத்திய மூவர் நெடுந்தீவில் கைது!

*யாழ்ப்பாணம், ஜன. 27*

படகு ஒன்றின் மூலமாக 49 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாவை கடத்தி செல்ல முற்பட்ட மூவர் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த சந்தேக நபர்கள் மூவரும் கடந்த 25ஆம் திகதி அதிகாலை வேளையில் நெடுந்தீவு தெற்கு கடற்பரப்பில் படகின் மூலமாக பயணித்துள்ளனர். இதன் போது அப்பகுதியில் கடமையிலிருந்த இலங்கை கடற்படையினர் இவர்களிடம் மேற்கொண்ட சோதனையிட்டுள்ளனர்.

இந்த சோதனையையடுத்து, அவர்கள் 49 கிலோவும் 906 கிராமும் நிறையுடைய கஞ்சாவை கடத்த முற்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரும் மருதங்கேணி மற்றும் மண்டைத்தீவை சேர்ந்த 25, 32, 42 ஆகிய வயதினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மூவரும் நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## கறுப்பு வாரத்துக்கு ஆதரவாக நோயாளிகளிடம் கையெழுத்து!

*யாழ்ப்பாணம், ஜன. 27*

இலங்கை முழுவதும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் உள்ளடங்கலாக தொழில் வல்லுநர்களின் ஒன்றிணைந்த கூட்டணியால் கறுப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

நீதியற்ற, தன்னிச்சையான முறையில் மக்களிடமிருந்து கொள்ளையிடப்படும் வரிப் பணத்துக்கு எதிராகவும் அரச மருத்துவமனைகளில் நிலவுகின்ற மருந்து பொருட்களுக்கான, மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுபாடுகளுக்கு எதிராக கறுப்பு வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் நோயாளர்களிடமும், பொதுமக்களிடமும் கையெழுத்துக்கள் பெறப்பட்டு ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. (ஐ)

## வவுனியா தமிழ் ம. வியில் 73 மாணவர்கள் சித்தி!

*வவுனியா, ஜன. 27*

புலமைப்பரீட்சையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் 73 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

அத்துடன், 100இற்கும் வெட்டுப் புள்ளியான 141 புள்ளிகளுக்கும் இடையே 96 மாணவர்களும் 70 - 99 புள்ளிகளுக்கு இடையே 21 மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு கீழ் 4 மாணவர்களும் பெறுபெற்றை பெற்றுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் புலமைப்பரீட்சைக்கு இம்முறை 194 மாணவர்கள் தோற்றியிருந்தமையுடன் அவற்றில் 190 மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினை பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 10 பொலிஸ் அதிகாரிகளுக்கு பதவி உயர்வு!

*கொழும்பு, ஜன. 27*

பிரதி பொலிஸ் மா அதிபரின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 10 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் நியமிக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரின் அங்கீகாரத்துக்கு உட்பட்டு இந்த நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களை பொலிஸ் மா அதிபர் செய்துள்ளார். (ஐ)

## கலைஞர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கல்!

*யாழ்ப்பாணம், ஜன. 27*

யாழ்ப்பாண பிரதேச செயலக பகுதியில் வாழும் கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புகள் மற்றும் வெளியீடுகளை ஊக்குவிக்க உதவி வழங்கப்படவுள்ளது.


வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் கலாசார செயல் திட்டத்தின் ஊடாக இந்தத் திட்டத்தை கலாசார பேரவை மேற்கொண்டுள்ளது.

தரமதிப்பீட்டு குழுவின் தீர்மானத்துக்கு அமைய கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவர். தகுதியானவர்கள் பிதேச செயலக கலாசார பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்ப்பாண பிரதேச செயலாளர் எஸ். சுதர்சன் அறிவித்துள்ளார். (ஐ)



அகில இலங்கை சைவப்புலவர் சங்க வைரவிழாவில் கதிர்காமன் நிஜலிங்கத்தின் சமய, சமூகப் பணியைப் பாராட்டிச் சைவப்புலவர் சங்கம் "சிவநெறிப் பிரகாசர்" விருது யாழ். பல்கலைக்கழக துனணவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜாவால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜனவரி - 27 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - தை 13
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சஷ்டி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
செலவுகள் செய்து முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பணியில் கவனம் தேவை. திட்டமிட்ட வேலையை செய்து முடிப்பீர்கள். அலைச்சலும் செலவுகளும் அதிகரிக்கும். பணத்தை கையாள்வதில் கவனம் தேவை.

**இடபம்**
எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். பண வரவு உண்டு. சுபநிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். பொருளாதார நிலை சீராகும். புதிய முயற்சியில் எதிர்பார்த்த ஆதாயம் அடைவீர்கள்.

**மிதுனம்**
வேலைக்காக முயற்சி மேற்கொண்டு, காத்திருப்பவர்களுக்கு எதிர்பார்த்த செய்தி வரும்.புதிய நண்பர் உதவியுடன் முயற்சி ஒன்றில் ஈடுபட்டு நன்மை காண்பீர்கள்.முயற்சிக்கேற்ற வருவாய் உண்டாகும்.

**கடகம்**
இரண்டு நாட்களாக இருந்த நெருக்கடிகள் விலகும். உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். உங்கள் திறமை வெளிப்படும். திட்டமிட்டு செயல்பட்டு ஒரு முயற்சியில் ஆதாயம் காண்பீர்கள்.

**சிம்மம்**
செயல்களில் இழுபறி உண்டாகும். மனம் ஒரு நிலையில் இல்லாமல் தடுமாற்றம் அடைவீர்கள். பகைவர்களின் கை மேலோங்கும். முயற்சியில் தடை உண்டாகும். எச்சரிக்கை அவசியம்.

**கன்னி**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் கூடி வரும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்னைகள் தீரும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**துலாம்**
உடல் நிலையில் ஏற்பட்ட சங்கடங்கள் விலகி, சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். நீண்ட நாள் முயற்சி ஒன்றில் வெற்றியைக் காண்பீர்கள்.

**விருட்சிகம்**
பிள்ளைகள் நிலையில் உயர்வு தோன்றும். வேலை வாய்ப்பு குறித்த செய்தி வரும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன் வரக்கூடும். சொத்து விவகாரம் ஒரு முடிவிற்கு வரும் பெற்றோர் ஆதரவுடன் உங்கள் விருப்பம் நிறைவேறும்.

**தனுசு**
முயற்சி இழுபறியாகும். மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். யோசித்து செயல்பட வேண்டிய நாள். உறவினரிடம் ஏற்பட்ட பிரச்னை விலகும். விரும்பியதை அடைந்து மகிழ்வீர்கள்.

**மகரம்**
தைரியத்துடன் செயல்படுவீர்கள். நீண்ட நாள் முயற்சி ஒன்றில் வெற்றி அடைவீர்கள். திட்டமிட்டு செயல்பட்டு லாபமடைவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். உடன் பிறந்தோரின் உதவி கிடைக்கும்.

**கும்பம்**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பண நெருக்கடிகளை சரி செய்வீர்கள். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். குடும்பத்தில் உங் கள் செல்வாக்கு உயரும்.

**மீனம்**
செயல்களில் தடுமாற்றம் உண்டாகும். எதிர்காலம் குறித்த சிந்தனை அதிகரிக்கும். பணியில் கூடுதல் பொறுப்புகளை ஏற்க வேண்டியதாக இருக்கும். கடுமையாக உழைத்தும் முயற்சியில் நீங்கள் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியாமல் போகும்.

# குடியரசு தின அணிவகுப்பில் ‘தமிழ்நாடு வாழ்க’ வாகனம்!

சென்னை, ஜன. 27

74ஆவது குடியரசு தினத்தையொட்டி சென்னையில் நடந்த விழாவில், அணிவகுப்பு ஊர்வலத்தில் முதலில் வந்த “தமிழ்நாடு வாழ்க” வாகனம் பார்வையாளர்களின் கவனத்தை பெற்றது.

இந்தியாவின் 74ஆவது குடியரசு தினம் நேற்று கொண்டாடப்பட்டது. சென்னை மெரினா காமராஜர் சாலையில் சேப்பாக்கம் பகுதியில் உள்ள உழைப்பாளர் சிலை அருகே நடைபெற்ற விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி, தேசியக் கொடியை ஏற்றி வைத்து, முப்படையினர், காவல்துறையினர் உள்ளிட்டோரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

குடியரசு தினத்தையொட்டி, காலை 8 மணிக்கு முதல்வர் ஸ்டாலினும், அவரைத் தொடர்ந்து ஆளுநர் ஆர்.என்.ரவியும் காவல் துறை மற்றும் இராணுவ அணி வகுப்புடன் விழா நடைபெறும் இடத்துக்கு வருகை தந்தனர். இந்திய தேசியக் கொடியை ஆளுநர் ஏற்றிவைத்தார். அப்போது இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலம் மலர் தூவப்பட்டது.

இதன் பிறகு, முப்படையினர், கடலோர காவல் படையினர், காவல், சிறை, வனம், தீயணைப்பு துறையினர், ஊர்க் காவல் படையினர் உள்ளிட்டோரின் அணிவகுப்பும், கடலோர காவல் படை, கடற்படை, விமானப்படையின் அலங்காரஊர்திகளும் வலம் வந்தன.

இந்த அணிவகுப்பில், தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு வாழ்க என்று வாசகம் இடம்பெற்றிருந்த வாகனம் முதலில் வந்தது. இதனை பார்வையாளர்கள் உள்ளிட்டோர் கண்டு ரசித்தனர்.

இந்த வாகனத்தில் தமிழகம், தமிழ்நாடு சர்ச்சையைத் தொடர்ந்து, பொங்கல் பண்டிகையின்போது வாழ்த்துகளைத் தெரிவிக்கும் வண்ணம் பலரும் சமூக வலைதளங்களில் பதிவிட்டிருந்த தமிழ்நாடு என்ற எழுத்துடன்கூடிய கோலமும் இடம்பெற்றிருந்தது.

முன்னதாக, 2023 ஜனவரி 4ஆம் திகதி அன்று ஆளுநர் மாளிகையில் நடந்த நிகழ்ச்சியொன்றில் பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழகம் என்று அழைப்பது மிக பொருத்தமாக இருக்கும் என்று பேசியிருந்தார். இது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஹிந்தி திணிப்புக்கு எதிரான தி. மு. க. போராட்டம் தொடரும்!

## முதலமைச்சர் ஸ்டாலின்

திருவள்ளூர், ஜன. 27

‘ஹிந்தி மொழித் திணிப்புக்கு எதிரான தி. மு. கவின் போராட்டம் எப்போதும் தொடரும்’ என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



நிகழ்வு ஒன்றில் பேசிய அவர், வீழ்ச்சியுற்றுக் கிடந்த தமிழினம் பகுத்தறிவு கருத்துகளால் இனமான, மொழி உணர்ச்சி பெற்று, வீறுகொண்டு எழுந்த வீரவரலாற்றை ஒவ்வொரு தமிழரும் நினைவுகூரும் நாள்தான் வீரவணக்க நாள்.

தமிழ் காக்கும் போராட்டத்தை முன்னெடுத்த இயக்கமான திமுக ஆட்சி அமைந்த பிறகுதான், தாய்த் தமிழ்நாட்டுக்குத் ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டப்பட்டது. தமிழும் ஆங்கிலமும்தான் இங்கு பயிற்று மொழியாக இருக்கும் என்று பேரறிஞர் அண்ணா சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினார். இன்றைக்கு உலகம் முழுக்க தமிழ்நாட்டு இளைஞர்கள் வலம் வர இந்த இருமொழிக் கொள்கைதான் காரணம்.

ஆட்சி நிர்வாகத்தில் தொடங்கி கல்வி மூலமாகத் திணிப்பது வரை ஒன்றிய பா. ஜ. க. அரசு ஹிந்தியை திணிப்பதை வழக்கமாக வைத்துள்ளது. ஒரே நாடு, ஒரே மதம், ஒரே தேர்தல், ஒரே தேர்வு, ஒரே உணவு, ஒரே பண்பாடு என்ற வரிசையில், ஒரே மொழியை வைத்து மற்ற தேசிய இன மக்களின் மொழிகளை அழிக்கப் பார்க்கிறார்கள். ஹிந்தி மொழித் திணிப்புக்கு எதிரான தி. மு. கவின் போராட்டம் எப்போதும் தொடரும். தமிழைக் காக்கும் தி. மு. கவின் முயற்சிகள் எப்போதும் நீடிக்கும்.

ஹிந்தி மொழி நாள் கொண்டாடும் ஒன்றிய அரசு மற்ற மாநில மொழிகளின் நாளை கொண்டாடுவது இல்லை. ஹிந்தியை ஆட்சிமொழியாக, அலுவல் மொழியாக மட்டுமல்ல அதிகாரம் செலுத்தும் மொழியாக பா. ஜ. க. அரசு உயர்த்திக் கொண்டு இருக்கிறது. இந்தியும், ஆங்கிலமும் அலுவல் மொழியாக இருக்கிற நிலையில், ஆங்கிலத்தை மொத்தமாக அகற்றப் பார்க்கிறார்கள். ஆங்கிலத்தை அகற்றுவதன் மூலமாக இந்திக்கு அந்த இடத்தைத் தாரை வார்க்கிறார்கள்.

தி. மு. க. எந்த மொழிக்கும் எதிரிகள் அல்ல. ஒருவர் தனது ஆர்வத்தின் காரணமாக எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் படித்துக் கொள்ளலாம். அதே நேரத்தில் ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்தோடு திணிக்க நினைத்தால் திமுக ஏற்காது. திராவிட மொடல் ஆட்சி, கடந்த 20 மாத காலத்தில் தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் ஏராளமான சாதனைகளை செய்திருக்கிறது. (ஐ)

# ஹிந்தியை திணிக்கும் எக்கட்சியும் தமிழ்நாட்டில் ஒருபோதும் வளராது!

புதுக்கோட்டை, ஜன. 27

ஹிந்தி மொழியை திணிக்கும் எந்தக் கட்சியும் தமிழகத்தில் வளராது. தமிழகத்தில் ஹிந்தி மொழியை திணிக்க முயற்சித்த காங்கிரஸ், அதன் பிறகு ஆட்சிக்கு வர முடியவில்லை. அதே நிலை பா. ஜ. கவுக்கும் ஏற்படும். என்று அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச் செயலாளர் டி. டி. வி. தினகரன் தெரிவித்துள்ளார்.



மேலும், முன்னாள் முதல்வர் பழனிசாமியின் தவறான ஆட்சியால் தி. மு. கவுக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்துள்ளது. ஆனால், தேர்தல் வாக்குறுதிகளை தி. மு. க. நிறைவேற்றவில்லை. மத்திய வேலை வாய்ப்புகளில் தமிழர்கள் தேர்வாகும் அளவுக்கு தமிழக அரசு எந்தத் திட்டத்தையும் செயல்படுத்தவில்லை.

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்து வெற்றி பெறலாம் என தி. மு. க. முயற்சி செய்து வருகிறது. ஆனால், தி. மு. க ஆட்சிக்கு முடிவு கட்டும் விதமாக அத் தொகுதியில் அ. ம. மு. க. போட்டியிடுகிறது. இதே போன்று, வரக்கூடிய மக்களவைத் தேர்தல், சட்டப்பேரவை தேர்தல் எப்போது நடந்தாலும் அதிலும் போட்டியிட்டு, முத்திரை பதிக்கும் - என்றார். (ஐ)

# இலங்கைக்கு உதவுவதில் முன்னுரிமை வழங்கப்படும்

## அறிவித்தது ஜப்பான்

கொழும்பு, ஜன. 27

கடன் நெருக்கடியை எதிர் நோக்கும் நாடுகளுக்கு உதவுவ தில் இலங்கைக்கு முன்னுரிமை வழங்கப்படும் என ஜப்பானின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி நிதி அமைச்சர் மசாடோ கனிடா தெரிவித்துள்ளார்.

ரொய்டர்ஸ் செய்தி சேவைக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், நடுத்தர வருவாய் நாடுகளின் கடன் நெருக்கடிக்கு சர்வதேச தீர்வு இருக்கவேண் டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

அத்தகைய நடவடிக்கைக ளுக்காக ஜப்பான் பாரிஸ் கிளப் மற்றும் சர்வதேச நாணய நிதி யம் போன்ற சர்வதேச அமைப் புகளுடன் நெருக்கமான ஒருங் கிணைப்பைப் பேணுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# குருநாகல் நகருக்குள் போலி லொத்தர் சீட்டு!

கொழும்பு, ஜன. 27

குருநாகல் நகரில் விற்பனை செய்யப்பட்டு வந்த 232 போலி லொத்தர் சீட்டுகளை பொலி ஸார் கண்டுபிடித்துள்ளனர்.

போலி லொத்தர் சீட்டுகள் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து குரு நாகல் பொலிஸ் உத்தியோகத் தர்கள் நேற்று முன்தினம் மாலை திடீர் சுற்றி வளைப்பை மேற்கொண்டனர்.

அங்கு 232 போலி லொத்தர் சீட்டுகளை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வாழைச்சேனை பிரதேசத் தைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். (அ)

# மருந்து உற்பத்தியை அதிகரிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 27

அடுத்த சில வருடங்களில் மருந்து உற்பத்தியை 50 வீத மாக அதிகரிப்பதில் இலங்கை கவனம் செலுத்துவதாக சுகா தார அமைச்சர் கெஹலிய ரம் புக்வெல தெரிவித்தார்.

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே அமைச்சர் இவ்வாறு தெரி வித்தார்.

நாட்டில் தற்போது 15-20 வீத மருந்துத் தேவையை உற் பத்தி செய்து வருவதாகவும், நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மருந்தின் உற்பத்தி அளவு அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# நிதி மோசடி வழக்கில் இருந்து நாலக கொடஹேவா விடுவிப்பு

கொழும்பு, ஜன. 27

பாராளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா உள் ளிட்ட 3 பிரதிவாதிகள் நிர பராதிகளாக கருதி கொழும்பு மேல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டனர்.

பிரதிவாதியான நாலக கொடஹேவா, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த் தனை ஆணைக்குழுவின் தலை வராக இருந்தபோது ஆணைக்குழுவின் நிதியில் இருந்து 50 இலட்சம் ரூபாவை "தாருண்யட ஹெடக்" என்ற அமைப்புக்கு வழங்கி அரசாங்க நிதியை முறைகேடாக பயன் படுத்தியதாக குற்றம் சுமத்தப் பட்டிருந்தது.

இந்த வழக்கின் தீர்ப்பை நேற்று அறிவித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா, பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூ பிக்க அரச தரப்பு முன்வைத்த சாட்சியங்கள் போதுமானதாக இல்லை என்று தெரிவித்தார்.

இதன்படி, பிரதிவாதிகள் விடுதலை செய்யப்படுவதாக நீதி பதி தமது தீர்ப்பில் அறிவித்தார்.

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுவின் முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க பெரேரா மற்றும் தாருண்யட ஹெடக் அமைப்பின் ரொனி இப்ராஹீம் ஆகியோர், விடு தலையான ஏனைய பிரதி வாதிகள் ஆவர். (அ)

# கலால் வரி கட்டளை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள ஏற்பாடு

கொழும்பு, ஜன. 27

கலால் வரி கட்டளைச் சட் டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ் சித் சியம்பலாபிட்டிய தெரி வித்தார்.

தற்போதைய மதுவரி கட்ட ளைச் சட்டத்தின் சிக்கலான தன்மையினால் பல பிரச்சனை கள் எழுந்துள்ளதாகவும், குறித்த சட்டத்தில் திருத்தம் மேற் கொள்ள நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் அவர் கூறினார்.

# மரக்கறிகள், பழங்கள் ரயிலில் கொண்டு செல்வதற்கு திட்டம்

## விரிவான அறிக்கை தயாரிக்குமாறு பணிப்புரை

கொழும்பு, ஜன. 27

ரயிலில் காய்கறிகள் மற்றும் பழங்களை கொண்டு செல்லும் திட்டம் குறித்து விரிவான அறிக்கையை தயாரிக்குமாறு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன அதிகாரி களுக்கு பணிப்புரை விடுத்துள் ளார்.

அண்மையில், ரயில் திணைக்களம் ஹாலிஎல, ஓஹிய, அம்பேவெல, பட்டி பொல மற்றும் நானுஓயா போன்ற ரயில் நிலையங்களை மையமாகக் கொண்டு, பல விசேட ரயில் பெட்டிகளைப் பயன்படுத்தி பரீட்சார்த்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டி ருந்தது.

பயணிகள் போக்குவரத்தில் இருந்து அகற்றப்பட்ட 5 ரயில் பெட்டிகள் பொருத்தமான வகையில் மாற்றியமைக்கப் பட்டு பரீட்சார்த்த பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே, மரக்கறிகள் மற்றும் பழங்களை ரயில் கொண்டு செல்லும் முறையை விரைவில் தயார் செய்யுமாறு விடயத் துக்கு பொறுப்பான அமைச்சர் பந்துல குணவர்தன அதிகாரி களுக்கு பணிப்புரை விடுத்துள் ளார். (அ)

# தியவன்னா ஓயாவில் நேற்று படகு கவிழ்ந்தது

கொழும்பு, ஜன. 27

பாராளுமன்றத்தை அண் மித்த கிம்புலாவல பிரதேசத்தில் தியவன்னா ஓயா பகுதியில் படகு ஒன்று கவிழ்ந்ததில் ஒரு வர் காணாமல் போயுள்ளார்.

அதி உயர் பாதுகாப்பு வல யத்துக்குட்பட்ட தியவன்னா ஓயா பகுதியில் சட்டவிரோத மாக மீன்பிடித்துக் கொண்டி ருந்த இருவர் பயணித்த பட கொன்றே இவ்வாறு கவிழ்ந்து விபத்துள்ளாகியுள்ளது.

படகிலிருந்த மற்றைய நபர் கரையேறி உயிர் தப்பியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 2 மணிய ளவில் இவர்கள் மீன்பிடிக்க சென்றுள்ளதாகவும், அதிகாலை 4.30 அளவில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# ஓட்டோ சாரதிகளால் அசௌகரியம்

கொழும்பு, ஜன. 27

நாட்டுக்கு வருகின்ற வெளி நாட்டு சுற்றுலாப் பயணிகள், ஓட்டோச் சாரதிகளால் பல் வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதாக சுற்றுலா அபி விருத்தி அதிகார சபை தெரிவித் துள்ளது.

சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச்செல்லும் ஓட்டோக் களை பதிவு செய்யும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் என அதிகார சபையின் தலை வர் பிரியந்த பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

வெளிநாட்டவர்களின் பாதுகாப்பிற்காக சுற்றுலா பொலிஸாருடன் இணைந்து ஒன்றிணைந்த வேலைத்திட்ட மொன்று ஆரம்பிக்கப்பட்டுள் ளதாக அவர் இதன்போது தெரி வித்தார். (அ)


# காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவு சிறுகதைப் போட்டி



மறைந்த எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவாக ஆண்டுதோறும் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் மிகச்சிறந்த சிறுகதை ஒன்றைத் தெரிவுசெய்து பரிசளிக்க காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை தீர்மானித்திருக்கின்றது.

2022ம் ஆண்டு வெளிவந்த சிறுகதைகள் இந்த தெரிவில் இடம்பெறவிருக்கின்றன. அவ்வாறு முதல்தடவையாக 2022ல் வெளிந்த உங்கள் சிறுகதைகளின் பிரதியை அனுப்பிவையுங்கள்.

அதனோடு இணைந்ததாக புதிதாக எழுதப்பட்ட இதுவரை வெளிவராதி சிறுகதைகளில் மூன்று சிறுகதைகளை தெரிவுசெய்து பரிசு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளை அனுப்பிவைக்கலாம்.

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை**
**707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஊடக அனுசரணை: ஈழநாடு


# மனிதக் கடத்தலை முறியடிக்க இலங்கைக்கு உலங்குவானூர்தி

கொழும்பு, ஜன. 27

இலங்கை அரசாங்கம் மேற் கொண்டுள்ள மனித கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக உலங்குவானூர்திகளை வழங்கு வதன் மூலம் இலங்கைக்கு உதவ இத்தாலி அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இத்தாலிய தூதுவர் ரீட்டா கியுலியானா மன்னெல்லா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது.

இரு நாடுகளுக்குமிடையி லான சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது, முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பது, கலாசார நிகழ்ச்சிகளை பரி மாறிக்கொள்வது மற்றும் இக் கட்டான நேரத்தில் இலங் கைக்கு இத்தாலி வழங்கக்கூடிய ஆதரவு குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப் பட்டுள்ளது. (அ)

# இலங்கையில் மனிதவள ஆட்சேர்ப்பா? குற்றச்சாட்டை மறுக்கின்றது துருக்கி

கொழும்பு, ஜன. 27

இலங்கையில் மனிதவள ஆட்சேர்ப்பில் ஈடுபட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை துருக்கி மறுத்துள்ளது.

சமூக ஊடகங்களில் இது தொடர்பில் சில தவறான தக வல்கள் பரப்பப்பட்டு வருவ தாக தூதரகத்தின் உடனடி கவனத்துக்கு கொண்டு வரப் பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள துருக்கி தூதரகம் தெரி வித்துள்ளது.

கொழும்பில் உள்ள துருக்கி தூதரகமோ அல்லது துருக்கிய உள்துறை அமைச்சகமோ இதுபோன்ற ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை முன்னெ டுக்கவில்லை என்று தூதரகம் கூறியது.

எனினும் இது சில தனியாட் களால் ஏற்பாடு செய்யப்பட்ட தாக தெரியவந்துள்ளது. (அ)



# திருக்கேதீஸ்வரம் சிவராத்திரி ஏற்பாடுகள் குறித்து ஆராய்வு

மன்னார், ஜன. 27

மஹா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக கேதீஸ்வர ஆலயத்தில் எதிர் வரும் 18 ஆம் திகதி சிவராத்திரி தினத்தை சிறப்பாக முன்னெடுக் கும் வகையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் அர சாங்க அதிபர் ஏ. ஸ்டன்லி டிமல் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய திருப் பணிச் சபை செயலாளர் சிவ சம்பு ராமகிருஷ்ணன் மற்றும் அதன் பிரதிநிதிகள், அரச தனி யார் திணைக்களின் தலைவர் கள்,பொலிஸ், இராணுவ உயர் அதிகாரிகள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் உட்பட அழைக் கப்பட்ட பிரதிநிதிகள் குறித்த கூட்டத்தில் கலந்துகொண்ட னர்.

கடந்த காலங்களில் நோய் தொற்று காரணமாக சிவராத் திரி தினம் மட்டுப்படுத்தப் பட்ட அளவில் யாத்திரிகர்கள் வருகை குறைக்கப்பட்டு பல சுகாதார கட்டுப்பாட்டுக்கு மத்தியில் இடம்பெற்றது.

மன்னார் திருக்கேதீஸ்வர திருத்தலத்தில் சிவராத்திரி தினத் தில் பல லட்சம் யாத்திரிகர்கள் வருகை தர உள்ள நிலையில் ஏற்பாடுகள் முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடப்பட் டது.

இதற்கான சகல ஏற்பாடுக ளும் முன் ஆயுதங்களும் குறிப் பாக சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு, குடிதண்ணீர் உள் ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.



# மொட்டு தோற்ற வரலாறு இல்லை!

## இம்முறையும் வெல்வோம் என்கிறார் ரோஹித

கொழும்பு, ஜன. 27

**சிறிலங்கா பொதுஜன பெரமுன தோற்ற வரலாறு இல்லை. 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் பெற்றுக்கொண்ட வெற்றியை இம்முறை தேர் தலிலும் பெற்றுக்கொள்வோம் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளு மன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங் களிடம் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:-

சிறிலங்கா பொதுஜன பெரமுன என்ற முறையில் 250 உள்ளூராட்சிச் சபைகளுக்கான வேட்புமனுக்களைத் தாக் கல் செய்துள்ளோம்.

பொதுஜன பெரமுன சார்ப ாக மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதற்காக வேட்பா ளர் பட்டியல்களைத் தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் தாக்கல் செய்த எந்த வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட வில்லை.

கட்சி என்ற முறையில் எமது பொறுப்புகளை சிறந்த முறை யில் நிறைவேற்றியுள்ளோம்.

அதேபோன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எமது கட்சியுடன் கூட்டணி அமைத் துக்கொண்டுள்ள கட்சிகள் கூட்டணி என்ற முறையில் வேறு சின்னத்தில் போட்டி யிடுகின்றன.

இம்முறை உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற முறையில் வெற்றி பெறுவதற் குத் தேவையான வேலைத் திட் டங்களை ஆரம்பித்துள்ளோம்.

இது உண்மையில் தொகுதி களுக்கான தேர்தலாகக் காணப் படுகின்றது.

2018 ஆம் ஆண்டு நாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வரலாற்று ரீதியிலான வெற்றி யைப் பெற்றோம்.

அந்த வெற்றியைப் போன்றே இம்முறை தேர்தலிலும் வெற்றி பெறுவோம் என்று எதிர்பார்க் கின்றோம்.

அரசு என்ற முறையில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை எம் மீது முன்வைக்கின்றனர்.தேர் தலை ஒத்திவைப்பதற்கு அரசு முயற்சிப்பதாகக் கூறுகின்றனர்.

பொதுஜன பெரமுன என்ற முறையில் தேர்தலை எதிர் கொள்வதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்.

எமது கட்சியே முதலாவ தாக வேட்பாளர் பட்டியலைத் தாக்கல் செய்தது.

கட்டுப்பணத்தையும் முதலா வதாக எமது கட்சியே கட்டி யது. எனவே, தேர்தலை எதிர் கொள்வதற்கு நாம் பின்வாங்க வில்லை - என்றார். (அ)

# உறுப்பினர் ஒருவர் பதவி விலகுவதால் தேர்தல் ஆணைக்குழு ஸ்தம்பிக்காது!

## கூறுகிறார் மகிந்த தேசப்பிரிய

கொழும்பு, ஜன. 27

தேர்தல்கள் ஆணைக்குழு வின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகுவதால், ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாது என தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு வின் உறுப்பினர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆணைக்குழுவின் கட மைகளில் இருந்து நேற்று முன் தினம் விலகினார் என அறிவிக் கப்பட்டுள்ளது.

அவரது பதவி விலகல் கடி தம் ஜனாதிபதியிடம் கிடைத் துள்ளதாக ஜனாதிபதி அலுவல கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ஆணைக் குழுவின் செயல்பாடுகளுக்கு மூன்று உறுப்பினர்கள் போது மானவர்கள் என்றும், ஒருவரின் பதவி விலகலால் ஆணைக் குழுவின் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாது என அரசிய லமைப்பின் உறுப்புரைகளை மேற்கோள்காட்டி மகிந்த தேசப்பிரிய பேஸ்புக் பதி வொன்றில் கூறியுள்ளார்.

அரசியலமைப்பின் சரத்துக் கமைய, மேற்கோள்காட்டி, தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரம் மூன்று உறுப்பினர்க ளைக் கொண்டது என்று அவர் கூறியுள்ளார்.

"தலைவர் இல்லாத நிலை யில், அங்கிருந்த உறுப்பினர்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவர் கூட் டத்துக்குத் தலைமை தாங்க லாம். அவர்களின் பெரும் பான்மை வாக்குகளுக்கமைய தீர்மானம் நிறைவேறும்" என்று அவர் கூறினார்.

அத்துடன், ஆணைக்குழு வின் உறுப்பினர் பதவி வெற்றி டமாக இருந்தபோதிலும், ஆணைக்குழுவுக்குச் செயற்பட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று அரசியலமைப்பின் சரத்தை மேற்கோள் காட்டி அவர் கூறினார். (அ)

# 140 அத்தியாவசிய மருந்து வகைகள்; வைத்தியசாலைகளில் பற்றாக்குறை

## சுகாதார அமைச்சின் செயலாளர் தகவல்

கொழும்பு, ஜன. 27

இலங்கையில் புற்று நோயாளிகளுக்கு வழங்கப் படும் 43 மருந்துகள் உட்பட 140 இற்கும் மேற்பட்ட அத்தி யாவசிய மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலா ளர் ஜனக சந்திரகுப்த தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

மருந்துப் பற்றாக்குறையால் சுகாதாரப் பணிகள் முடங்கி யதுடன், நோயாளிகளும் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

பற்றாக்குறையாக உள்ள மருந்துகளுக்கு கொள்முதல் கட்டளைகள் செய்யப்பட்டுள் ளன. எனினும் பணம் செலுத்துவதில் சிக்கல்கள் உள்ளன.



மருந்து இறக்குமதி செய்ய தேவையான நடவடிக்கை

இந்நிலையில் புற்றுநோயா ளர்களுக்கு வழங்கப்படும் 43 மருந்துகள் இந்தியக் கடன் வரி யின் கீழ் கட்டளைச் செய்யப் பட்டு, அந்த 43 மருந்துகளும் இன்னும் பதினைந்து நாட்க ளில் இலங்கையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பற்றாக்குறையாக உள்ள எஞ்சிய மருந்துகளை இறக்கு மதி செய்ய தேவையான நட வடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது - என்றார். (அ)

# அரசின் வரி கொள்கையை எதித்து விரிவுரையாளர்களும் போராட்டம்

கொழும்பு, ஜன. 27

அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வருமான வரிக் கொள்கைக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துமுகமாக அனைத்துப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தொழிற் சங்க நடவடிக்கையில் குதித்துள்ளதாக அச்சங்கத் தின் செயலாளர் ரொகான் லக்சிறி அறிவித்துள் ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இலங்கையில் ஜனவரி மாதம் முதல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு இறைவரிச் சட் டத்தின் கீழான வருமான வரிக் கொள்கை எம்மை வெகுவாகப் பாதித்துள்ளது. நாட்டின் நற்பிர ஜைகளாக - நாட்டின் அபிவிருத்திக்காக வரி அற விடப்படுவதை நாம் எதிர்க்கவில்லை.

ஆனாலும் இம்மாதம் அறிமுகப்படுத்தப்பட்டி ருக்கும் வரிக் கொள்கை நியாயமற்றதும், முறை யற்றதுமாகும். இதனால் எமது சம்மேளனத்தின் உறுப்பினர்கள் பலர் ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு மாற்றாக கைக்கொள்ளத்தக்க திட்டங்களை எமது சம்மேள னம் அரசாங்கத்துக்கு முன்மொழிந்திருந்தது. ஆனால் அவற்றுக்கு அரசாங்கத் தரப்பிடமிருந்து எந்தவிதமான பதில்களும் கிடைக்கவில்லை. இது பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வின் தலைவர் மற்றும் இலங்கைப் பல்கலைக்கழ கங்களின் துணைவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர் கள் சபையின் தலைவர் ஆகியோருக்கும் எழுத்து மூலம் அறிவித்திருந்தோம்.

இதனால், சட்ட ரீதியாக எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும், அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் நாம் தொழிற் சங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டிய கட் டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம். கடந்த 24 ஆம் திகதி கூடிய எமது பிரதிநிதிகள் சபை இன்றிலிருந்து மறு அறிவித்தல் வரை எமது உறுப்பினர்கள் பல்கலைக்கழகங்களில் நடக்கும் எந்தவொரு கூட்டத்திலும் பங்குபற்றுவதில்லை என்று முடிவு செய்துள்ளது - என்றார். (அ)

# தொலைபேசிகளுக்கு வரும் சாரதி அனுமதிப் பத்திரம்!

கொழும்பு, ஜன. 27

இலங்கையில் சாரதி அனு மதிப் பத்திரம் வழங்குவதில் புதிய முறையொன்று நடை முறைப்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை மோட் டார் போக்குவரத்து திணைக் களத்தின் ஆணையாளர் நாய கம் நிஷாந்த வீரசிங்க தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தொலைபேசிகளின் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் முறை வகுக்கப்படும்.

இந்த வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் தற்போது இடம்பெற்று வரு கிறது.

இந்த புதிய முறை நடை முறைப்படுத்தப்பட்டதன் பின் னர் சாரதி அனுமதிப் பத்திரத் திற்கு அட்டை தேவையில்லை.

சாரதி அனுமதிப்பத்திரம் தொலைபேசிக்கு அனுப்பி வைக்கப்படும். தேவைப்படுப வர்கள் அட்டையை பெற்றுக் கொள்ள முடியும்.

சாரதி அனுமதிப் பத்திரம் அச்சிடுவதில் தாமதம் ஏற்படு கிறது.

எனவே தொலைபேசி களுக்கு வழங்குவதனூடாக அது மிகவும் வசதியாக இருக் கும் - என்றார். (அ)

# ஜனாதிபதியின் சர்வகட்சி மாநாட்டில் முற்போக்கு கூட்டணி பங்கேற்கவில்லை

## மனோ கணேசன் எம்.பி. அறிவித்தார்

கொழும்பு, ஜன. 27

"ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் இன்றைய சர்வ கட்சி மாநாட்டில் தமிழ் முற்போக் குக் கூட்டணி கலந்துகொள்ள வில்லை. எமது பிரச்னைகள் பற்றியும் பேசப்படாவிட்டால் எதற்காக நாங்கள் பார்வையா ளர்களாக கலந்துகொள்ள வேண்டும்?" - இவ்வாறு நேற்று கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் இது தொடர்பான நடத்தை குறித்து அவர் அதி ருப்தி வெளியிட்டுள்ளார்,

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தேசிய இனப்பிரச்னை தீர்வு தொடர்பான உங்களின் அறி விக்கப்பட்ட செயற்பாட்டில், இந்திய வம்சாவளி மலையக தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளுடனும், எமது மக்களின் அரசியல் அபி லாஷைகள் தொடர்பில் பேசுங் கள் என நாம் திரும்ப, திரும்ப ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் கோரினோம். எமது பிரச்னை



கள் பற்றி பேச உங்கள் தலை மையில் விசேட அதிகாரம் கொண்ட குழுவை நியமியுங் கள் எனவும் கோரியுள்ளோம்.

ஆனால், பகிரங்க மேடை களில் இருந்து கூறப்பட்ட சில கருத்துகளை தவிர, இது தொடர்பில் இதுவரை ஜனாதி பதி விக்கிரமசிங்க அதிகார பூர்வ மாக எதுவும் செய்யவில்லை. ஈழத்தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, பொறுப்புக் கூறல் தொடர்புகளில் வடக்கு- கிழக்கு கட்சிகளுடன் நடத்தப் படும் பேச்சுகளை நாம் முழு மனதுடன் வரவேற்கிறோம்.

ஆனால், மலையக தமிழரின் அரசியல் அபிலாஷைகள் இன்று தோட்ட வரம்புகளுக்கு வெளியே வளர்ந்து விட்டன என்பதை அனைத்து தரப்பின ரும் அறிய வேண்டும். தேசிய இனப்பிரச்னை என்பது இன்று வடக்கு-கிழக்கை மட்டும் மையம் கொண்டதல்ல. அது தேசியமயமானது என்பதை அரசு புரிந்துக்கொள்ள வேண்டும்.

தமிழ் முற்போக்கு கூட்ட ணி, ஒரு எதிரணி கட்சியாக இருந்தாலும்கூட, தேசிய இன பிரச்னை தொடர்பில் பேச்சு களை நடத்த ஜனாதிபதி விக்கிர மசிங்கவுக்கு மக்கள் ஆணை இருக்கிறதா என நாம் கேள்வி எழுப்பவில்லை. இந்நாட்டின் பிரதான பிரச்னை தேசிய இன பிரச்னை ஆகும். இந்த நாட் டின் எந்தவொரு அரசு தலை வருக்கும் இதற்காக விசேட மக்களாணை அவசியமில்லை என்பது எமது நிலைப்பாடு. இந்த கருத்தை நாம் நமது வடக்கு - கிழக்கு நட்பு கட்சி களுடனும் பரிமாற்றி கொண் டுள்ளோம். ஆகவே, இன்று ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் இது தொடர்பான நடத்தையில் நாம் அதிருப்தியடைந்துள் ளோம் - என்றார். (அ)

# டயனா கமகேக்கு அவகாசம்

கொழும்பு, ஜன. 27

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் பாராளு மன்ற உறுப்பினர் பதவியை நீக்குமாறு கோரி தாக்கல் செய் யப்பட்ட மனு தொடர்பில் ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய அமைச்சர் டயனா கமகேக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று கால அவகாசம் வழங்கியுள்ளது.

டயனா கமகேவின் பாராளு மன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி சமூக ஆர்வலர் ஓசல ஹேரத் தாக்கல் செய்த மனு சோபித ராஜகருணா மற்றும் தம்மிக



கணேபொல ஆகியோர் அடங் கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன் நேற்று வியாழக் கிழமை விசாரணைக்கு வந்தது.

இந்நிலையில் டயனா கமகே தரப்புக்கு ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க பெப்ரவரி 17 வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியது.(அ)

# ஜனநாயகத்தை விரும்பும் யாருமே சார்ள்ஸை மன்னிக்க மாட்டார்கள்!

## சந்திம வீரக்கொடி விசனம்



கொழும்பு, ஜன. 27

இக்கட்டான நேரத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் அங்கம் வகித்த பி.எஸ்.எம். சார்ள்ஸ் தனது பதவியை இரா ஜினாமா செய்தமை இந்த நாட்டின் ஜனநாயகத்திற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தி யுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஜனநாயகத்தைப் போற்றும் எந்தக் குடிமகனும் திருமதி சார்ள்ஸை மன்னிக்க மாட்டார்கள் என்று அவர் கூறினார். (அ)

# நாடு கடத்தப்பட்டு இலங்கை வந்த 38 பேர் சி.ஐ.டியினரிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஜன. 27

பிரான்ஸின் கீழுள்ள ரீயூனி யன் தீவுக்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்க முயன்ற குற்றச்சாட் டில் கைது செய்யப்பட்ட 38 இலங்கையர்கள் நேற்று முன் தினம் இரவு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

கடந்த ஜனவரி 14 ஆம் திகதி இந்த இலங்கையர்கள் குழு, ரீயூ னியன் தீவில் கைது செய்யப் பட்டனர் என கடற்படை தெரிவித்துள்ளது.

நீர்கொழும்பு மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த 2022 டிசெம்பர் முதலாம் திகதி 5 பணியாளர்களுடன் பல நாள் மீன்பிடிப் படகு ஒன்று புறப்பட்டது.

பின்னர் அவர்கள் கடந்த டிசெம்பர் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் புத்தளம், பத்தலங் குண்டுவில் இருந்து 64 இலங் கையர்களை சட்டவிரோதமாக ஏற்றிச் சென்றுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, பல நாள் மீன்பிடி படகு டியாகோ கார்சியா தீவை நோக்கிச் சென் றது. அங்கு அவர்கள் டிசம்பர் 30 ஆம் திகதி பிரித்தானியா கடற் படையினரால் கைது செய்யப் பட்டு நாடு கடத்தப்பட்டனர்.

அதன்பிறகு, ஆட்கடத்தல் கடத்தல்காரர்கள் சட்ட விரோதமாக இடம்பெயர்ந்த குழுவுடன் பிரான்ஸின் அதி காரத்தின் கீழுள்ள ரீயூனியன் தீவுக்குச் சென்றுள்ளனர்.

அங்கு அவர்கள் ஜனவரி 14 ஆம் திகதி ரீயூனியன் தீவின் அதிகாரிகளால் கைது செய் யப்பட்டதாக கடற்படை தெரி வித்துள்ளது.

ரீயூனியன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர், அவர்கள் நேற்று முன் தினம் புதன்கிழமை இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதேவேளை, குறித்த நபர் கள் மேலதிக சட்ட நடவடிக் கைகளுக்காக குற்றப் புல னாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த கடத்தலுக்கு தலைமை தாங்கிய கற்பிட்டி மற்றும் கண்டி பகுதிகளில் உள்ள ஆட் கடத்தல்காரர்கள், ஒவ்வொரு நபரிடமிருந்து தலா 400,000 ரூபா முதல் 1,000,000 ரூபா வரை பணம் வசூலித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

ரீயூனியன் தீவுக்குள் மக்கள் சட்டவிரோதமாக நுழைவதை பிரெஞ்சு அரசாங்கம் அனும திக்காததால், இதுபோன்ற மோச டிகளில் சிக்குவதை தவிர்க்கு மாறு சிரமப்பட்ட உழைத்த பணத்தை வீணடிக்காதிருக்கு மாறு பொதுமக்களை கடற் படை வலியுறுத்தியது. (அ)

# முல்லைத்தீவிலிருந்து யாழ்.நோக்கி வந்த அரச அலுவலர்களின் பஸ் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜன. 27

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பா ணம் நோக்கிப் பயணித்த அரச அலுவ லர்கள் சேவை பஸ் மீது யாழ்ப்பா ணத்தில் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இத னால் பஸ்ஸின் கண்ணாடி உடைந்து சேதமடைந்துள்ளது.

இருந்தபோதிலும் அலுவலர்கள் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்பட வில்லை என்று பஸ்ஸில் பயணித்த உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

குறித்த அரச பஸ் சேவை கடந்த வாரம் முதலே பணியில் ஈடுபடத் தொடங்கியதாக தெரிவிக்கப்படுகின் றது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பா ணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)




# கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் கறுப்புப்பட்டி போராட்டம்!

கிளிநொச்சி, ஜன. 27

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் கறுப்புப் பட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி, மல்லாவி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட புதிய வரிக் கொள்கை மற்றும் வைத்திய சாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.



இதன்போது, பொது மக்களிடம் கையொப்பங்கள் பெறப்பட்டதுடன், குறித்த மகஜர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வைத்தி யர்கள் தெரிவித்தனர். (அ)



# நாணய நிதியத்தின் நிதி வசதி பெறுவதில் இலங்கைக்கு ஆதரவளிக்க பிரிட்டன் தயார்!

லண்டன், ஜன. 27

இலங்கை, உரிய நேரத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியளிப்பு வசதியைப் பெறுவதற்குத் தேவையான நிதி உத்தரவாதங்களை பரிசீலிக்கத் தயார் என்று பிரிட்டன் அறிவித்துள்ளது. பரிஸ் கிளப்பின் அங்கத்தவர் என்ற வகையில் இந்த ஆதரவை பிரிட்டன் வெளியிட்டுள்ளது.

பரிஸ் கிளப் மற்றும் பரிஸ் கிளப் அல்லாத கடன் வழங்குநர்களுக்கு இடையிலான முன்மொழியப்பட்ட ஒருங்கிணைப்பு தளத்துக்கு பிரிட்டன் முழு ஆதரவளிக்கிறது.

இது இலங்கையில் கடன் நிலைத் தன்மையை மீட்டெடுப்பதற்கான மிகச் சிறந்த வழியாகும் என்று தாம் நம்புவ தாக பிரித்தானியாவின் வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலக அமைச்சர் ஆன் மெரி ட்ரே வெல்யன், அந்த நாட்டின் பாராளு மன்றில் தெரிவித்தார். (அ)

ஈழநாடு



# மோடி குறித்த பி. பி .சி. ஆவணப்படத்தை புதுவை பல்கலைக்கழத்தில் திரையிட மறுப்பு

## செல்போன், லப்ரொப்பில் பார்த்த மாணவர்கள்!



இந்திய பிரதமர் மோடி குறித்து பிபிசி வெளியிட்ட ஆவணப் படத்தை புதுவை பல்கலைக்கழகத்தில் திரையிட அனுமதி மறுத்த நிலையில், மாணவர்கள் அவர்களது தொலைபேசி மற்றும் லேப்டாப்பில் பதிவிறக்கம் செய்து பார்த்தனர். பாதுகாப்பு கருதி புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக வளா கத்தில் காவல்துறையினர் குவிக்கப்பட்டனர்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள புதுவை பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது. பி.பி.சி.யின் 'இண்டியா: தி மோடி க்வெஸ்டின்' (India: The Modi question) ஆவண படம் பல்கலைக்கழக வளாகங்களில் திரையிடப்படும் என்று இந்திய மாணவர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு மாணவர் அமைப்புகள் அறிவித்திருந்தன.

இதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் பொதுவெளியில் திரையிடக்கூடாது என தெரிவித்திருந்த நிலையில் விடுதி அறைகளில் திரையிடப்படும் என அறிவித்தனர். அதற்கும் பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதிக்க முடியாது என அறிவித்ததாக கூறப்படுகிறது. பாது காப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை யாக காவல்துறை குவிக்கப்பட்டனர். இந்த நிலையில், 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்களது தொலைபேசி மற்றும் லேப்டாப்பில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பிபிசி ஆவணப் படத்தை பல்கலைக்கழகம் வளாகத்தில் உள்ளே கூடி பார்த்தனர்.

இதே போன்று கேரளா மாநிலத்தில் உள்ள புதுச்சேரி மாஹே பிராந்தியத்தி லும் பிபிசி வெளியிட்ட மோதி ஆவணப்படம் திரையிடப்பட்டது. இந்திய ஜனநாயக இளைஞர் கூட்ட மைப்பு சார்பில் இந்த ஆவணப்படத்தை திரையிட்டுள்ளனர். அதை அவர்களது பேஸ்புக் பக்கத்திலும் நேரடியாக ஒளிப்பரப்பு செய்தனர்.

**மின்சாரம் , வைஃபை துண்டிப்பு**

இதுகுறித்து புதுவை பல்கலைக் கழகத்தில் பிபிசி வெளியிட்ட மோடி ஆவணப்படத்தை பார்த்த மாணவர் களில் ஒருவரை பிபிசி தொடர்பு கொண்டு பேசியது.

ஆராய்ச்சி மாணவரான அவர் பேசு கையில், "பிபிசி வெளியிட்ட மோடி குறித்த ஆவணப்படத்தை திரையிட இருப்பதாக இந்திய மாணவர் சங்கம் சார்பில் அறிவித்தனர். ஆனால் அதற்கு பல்கலைக்கழகம் நிர்வாகம் சார்பில் அனுமதி அளிக்கவில்லை. மேலும் பிற்பகல் மூன்று மணிக்கு மேல் பல்க லைக்கழகம் முழுவதும் மின்சாரம் மற் றும் வைஃபை (wifi) இணைய வசதி துண்டிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள ஜென்டர் கேட் அருகே சுமார் 300 மாண வர்கள் இணைந்து எங்களது தொலை பேசி மற்றும் மடிக்கணினியில் பிபிசி யின் ஆவணப்படத்தை பார்த்தோம்.

அப்போது ஏபிவிபி அமைப்பை சேர்ந்த 10 பேர் எங்களுக்கு எதிராக ஜெய் சிறிராம், மோடி மோடி, சாமியே சரணம் ஐயப்பா என்ற கோஷங்களை எழுப்பினர். மேலும் இந்தியில் எங்களை பார்த்து சுட்டுக் தள்ளுங்கள் என்று கத்தினர். மேலும் இரு தரப்பினரும் இடையே மோதல் ஏற்பட இருந்த நிலையில் பல்கலைக்கழக தனியார் காவலர்கள் பாதுகாத்தனர். தற்போது மின் இணைப்பு வந்துள்ளது. ஆனால் இணைய வசதி வரவில்லை," என்று ஆராய்ச்சி மாணவர் தெரிவித்துள்ளார்.

**டில்லி ஜே.என்.யூ. வளாகத்திலும் திரையிடல்**

முன்னதாக, டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பிபிசியின் ஆவணப் படம் நேற்று முன்தினம் திரையிடப் பட்டது. நர்மதா மாணவர் விடுதியின் முன்புள்ள ஜே.என்.யூ. மாணவர் சங்க அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு இந்த ஆவணப்படம் திரை யிடப்படுதாக இருந்தது. இதுகுறித்து ஒரு நாள் முன்னதாகவே ஜே.என்.யூ. மாணவர் சங்கம் அறிவிப்பு வெளி யிட்டிருந்தது.



மாணவர் சங்கத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து, ஆவணப்படத்தை திரை யிட அனுமதி பெறப்படவில்லை, ஆகவே அந்நிகழ்ச்சியை மாணவர்கள் ரத்து செய்ய வேண்டும் என்று ஜே.என். யூ. நிர்வாகம் அறிவுறுத்தியது. இதனை மீறும் மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டிருந்தது.

ஆவணப்படம் திரையிடப்படவிருந்த இடத்தில் இரவு 8 மணி முதலே மாண வர்கள் கூடத் தொடங்கி விட்டனர். ஆனால், ஆவணப்பட திரையீட்டிற்கு முன்பாக இரவு 8.30 மணியளவில் ஒட்டுமொத்த வளாகத்திலும் மின்தடை ஏற்பட்டது.

அங்கே கூடியிருந்த மாணவர்கள், நிர்வாகமே மின்சாரத்தை துண்டித்து விட்டதாக குற்றம்சாட்டினர். ஆவணப்பட திரையீட்டிற்கு சற்று முன்னதாக மின் தடை ஏற்பட்டது ஏன் என்பதற்கு ஜே.என்.யூ. நிர்வாகம் சார்பில் எந்தவொரு பதிலும் இல்லை.

ஆவணப்படத்தை பார்க்க கூடியிருந்த மாணவர்களிடையே, செல்போன் வெளிச்சத்தில் இரவு 9.10 மணியளவில் ஜே.என்.யூ. மாணவர் சங்க தலைவர் அய்ஷே கோஷ் உரையாற்றி னார்.

"உண்மை வெளியே வந்துவிடும் என்று அவர்கள் பயப்படுகிறார்கள். நீங்கள் மின்சாரத்தை தடை செய்யலாம், எங்களிடம் இருந்து திரையை, லேப் டாப்பை பறித்துக் கொள்ளலாம், ஆனால் எங்களது கண்களையும், உத்வேகத்தையும் உங்களால் பறிக்கவே முடியாது," என்று அவர் கூறினார்.

"பொதுவெளியில் ஆவணப்படம் திரையீட்டை வேண்டுமானால் மோடி அரசு தடுக்கலாம். ஆனால், பொதுமக் கள் அதனை பார்ப்பதை தடுக்க முடியாது" என்றார்.

மின்தடை காரணமாக, பெரிய திரையில் ஆவணப்படத்தை திரையிட முடியவில்லை. ஆனால், அங்கே கூடியிருந்த மாணவர்களுக்கு கியூஆர் குறியீடு அச்சிடப்பட்ட ஏ4 பேப்பர் களை மாணவர்கள் சங்கத்தினர் விநியோகிக்கத் தொடங்கினர். அதன் உதவியுடன், மாணவர்கள் அவர்களது செல்போன் வாயிலாக ஆவணப் படத்தை பார்க்க முடிந்தது.

இரவு 10.20 மணியளவில், ஆவணப் படத்தை பார்த்துக் கொண்டிருந்த மாணவர்கள் மீது கற்கள் விழத் தொடங்கின. அதன் அருகே அமைந் துள்ள டெப்லாஸ் உணவகத்தில் இருந்து அந்த கற்கள் வீசப்பட்டன.

கல் மட்டுமல்ல, செங்கற்களும் கூட வீசப்பட்டன. கல்வீச்சு தொடங்கி யதுமே ஆவணப்படம் பார்ப்பதை பாதியில் அப்படியே நிறுத்திவிட்டு அந்த இடத்தை விட்டு மாணவர்கள் ஓட முயன்றதால் நெரிசல் ஏற்பட்டது.

கல்வீச்சு தொடங்கிய ஐந்தே நிமிடங்களில் மாணவர் சங்க அலுவல கத்திற்கு வெளியே மாணவர்கள் கூடியிருந்த இடம் காலியாகிவிட்டது. ஆவணப்பட திரையிடலுக்காக அங்கே கூடிய மாணவர்கள் ஜே.என்.யூ. பிரதான நுழைவு வாயிலுக்கு ஊர்வலமாகச் சென்று முழக்கங்களை எழுப்பினர்.

(பிபிசி)





# சனிப் பெயர்ச்சி பலன்கள் 2023



## கன்னி



வழக்கு விஷயங்களில் வெற்றிகரமான திருப்பங்கள் உண்டாகும். கூட்டாளிகள், நண்பர்கள் தேவையான ஆதரவை நல்குவார்கள். உங்கள் மீதான நம்பிக்கையும் பலப்படும். வெளிநாடு தொடர்பான வாய்ப்புகளுக்கு முக்கியத்துவம் அளிப்பீர்கள்.

விவாதங்களில் சாதுர்யமான பேச்சினால் உங்கள் எண்ணங்களை சிறப்பாக வலியுறுத்துவீர்கள். பணப் புழக்கமும் அதிகரிக்கும். போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். உங்களின் பலம், பலவீனம் இரண்டையும் புரிந்துகொண்டு திட்டங் களைச் செயல்படுத்துவீர்கள். குடும்பத் துக்குத் தேவையான நவீன உபகரணங் களை வாங்குவீர்கள். உடல் ஆரோக்கியம், மனவளம் இரண்டும் நல்ல நிலையிலேயே தொடரும்.

குழந்தைகளின் வளர்ச்சி மனதுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும். சொத்து தொடர்பான ஆவணங்களில் இருந்த குறைகளைச் சரிசெய்வீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்களும் கிடைக்கும். உங்கள் நிர்வாகத் திறமை பளிச்சிடும்.

இல்லத்திலும் சுபகாரிய முயற்சிகளில் இருந்து வந்த தடைகள் நீங்கும். அரசு அதிகாரிகளும் உங்களுக்குச் சாதகமாகச் செயல்படுவார்கள். இக்கட்டான தருணங்களில் உணர்ச்சி வசப்படாமல் பொறுமையுடன் செயல்படுவீர்கள். அனைத்து செயல்களிலும் உங்கள் தனித்தன்மை வெளிப்படும்.

**உத்தியோகஸ்தர்கள்:** அலுவலகத்தில் அனுகூலமான சூழலில் இருப்பீர்கள். சக ஊழியர்களும் நட்பு பாராட்டுவார்கள். இடையூறுகளைத் தகர்த்து முயற்சிகளில் சாதனைகளைப் படைப்பீர்கள். உழைப்புக்குத் தக்க ஊதியத்தைப் பெறுவதில் எந்தத் தடையும் இருக்காது. வீண் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டாம். உங்கள் வேலைத் திறன் பளிச்சிடும். விரும்பிய பணியிட மாறுதல் களையும் பெறுவீர்கள்.

**வியாபாரிகள்:** லாபம் மேம்படும். கூட்டாளிகளை நம்பாமல் தனித்தே ஈடுபடுங்கள். புதிய வியாபாரத்தையும் தொடங்குவீர்கள். கடினமாக உழைக்க வேண்டி இருக்கும்.

**விவசாயிகள்:** விளைச்சல் அபரிதமாக இருக்கும். இடைத் தரகர்களைத் தவிர்த்து பொருள் களை உயரிய நிலைக்கு விற்பீர்கள். பழைய குத்தகை பாக்கிகள் வசூலாகும். பாசன வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். நெருக்கடியான சூழ்நிலைகளில் இருந்து மாற்றம் உண்டாகும்.

**அரசியல்வாதிகள்:** கட்சி மேலிடத்திலிருந்து பாராட்டுகள் குவியும். உங்கள் பணிகளைத் திட்டமிட்டு வகுத்துக் கொண்டு செயலாற்றுவீர்கள். வழக்கு விவகாரங்களில் கவனத்துடன் ஈடுபடவும். கூடுமானவரை சட்ட சிக்கல்களுக்குச் செல்லவேண்டாம்.

**கலைத்துறையினர்:** புதிய ஒப்பந்தங்கள் தேடி வரும். சிறப்பாகவே இருக்கும். பிறருக்கு உதவிகளைச் செய்வீர்கள். முன்னேற்றம் உண்டாகும்.

**பெண்கள்:** குடும்பத்தில் சிறு பிரச்னைகள் தோன்றி மறையும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பிறரிடம்



நியாயமாக நடந்துகொள்ளவும். விலை உயர்ந்த ஆடைகள், ஆபகரணங்களை வாங்குவீர்கள்.

**மாணவர்கள்:** படிப்பில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவுடன் தேவைகள் பூர்த்தியாகும். சக மாணவர்கள் ஆதரவை அளிப்பார்கள். வீண் விவாதங்களைத் தவிர்த்துவிடுங்கள். வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**பரிகாரம்:** ஸ்ரீராமபிரானை வழிபடவும்.

---

## துலாம்



நெருக்கடியான சூழ்நிலைகளை புத்தி சாதுர்யத்துடன் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் நிம்மதியைக் காண்பீர்கள். உங்கள் எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கிடைக்கும்.

தொழிலில் சிறப்பான வாய்ப்புகள் உண்டாகும். அதிர்ஷ்ட வாய்ப்புகளின் மூலம் வருமானம் கூடும். புதிய சேமிப்புத் திட்டங்களிலும் சேர்வீர்கள். இல்லத்தில் சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும். உடன்பிறந்தோருடன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பீர்கள். உற்சாகமான பயணங்களையும் செய்ய நேரிடும்.

வீட்டிலும் வெளியிலும் பெயரும் புகழும் கூடும். நடக்காது என்று நினைத்திருந்த காரியங்கள் விரைவில் நடந்து முடிந்துவிடும். மனதில் இருந்த அழுத்தங்கள் விலகி தெளிவு காண்பீர்கள். சிறிய மருத்துவச் செலவுகள் செய்ய நேரிடும். தொழிலில் சிறப்பான ஸ்திரத்தன்மை உண்டாகும்.

சிலர் புதிய வீடு, வாகனங்களை வாங்குவார்கள். மழலை பாக்கியத்தால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிறையும். உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்களிடம் பெருந்தன்மையாக நடந்துகொள்வீர்கள். அதே நேரத்தில் செய்நன்றியை மறக்க மாட்டீர்கள். முக்கியமான செயல்களைச் செய்யும்போது, அவைகளை உங்களின் நேர்பார்வையிலேயே செய்யுங்கள்.

**உத்தியோகஸ்தர்கள்:** கடின உழைப்பை தாரக மந்திரமாகக் கொண்டு உழைக்கவும். சக ஊழியர்களிடம் பழகும்போது, நல்ல முறையில் பேசிப் பழகவும். மேலதிகாரிகளின் நன்மதிப் பைப் பெறுவீர்கள். வருமானத்துக்கு குறைவு வராது. அலுவலக ரீதியான பயணங்களில் நல்ல அனுகூலத்தைப் பெறுவீர்கள்.

**வியாபாரிகள்:** கூட்டாளிகள் நட்புடன் பழகுவார்கள். கொடுக்கல் வாங்கலில் சற்று கவனம் தேவை. நண்பர்களுடன் பழைய பிணக்குகளை மறந்து நட்புடன் பழகுவீர்கள். பொருளாதாரத்தில் தொய்வு ஏற்படாது. உங்கள் பொருள்களை மற்ற சந்தைகளில் விற்க முயற்சித்து, ஓரளவு வெற்றியும் காண்பீர்கள். அரசு வகையில் கஷ்டங்கள் வராது. புதிய முதலீடுகளை பெரிய அளவில் செய்ய வேண்டாம்.



**விவசாயிகள்:** குடும்பத்தில் சுப காரியங்களை நடத்துவார்கள். உழைப்புக் கேற்ற பலன்களைப் பெறுவார்கள். பணவரவு சீராக இருந்தாலும், புதிய குத்தகைகளை நாடி செல்ல வேண்டாம். விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவிகளைச் செய்வீர்கள். அரசு வழியில் இருந்த இடைஞ்சல் விலகி, காரியங்கள் கைகூடும்.

**அரசியல்வாதிகள்:** வழக்குகள் சாதகமாகவே முடிவடையும். கட்சி மேலிடத்துக்குத் தகவல் அனுப்பும் போது, எச்சரிக்கையாகவே இருக்கவும். தொண்டர்களின் ஆதரவு நன்றாக இருக்கிறது.

**கலைத்துறையினர்:** அனுகூலத்திருப்பங்கள் உண்டாகும். பாராட்டும் பணமும் ஒருங்கே வந்து சேரும். ரசிகர்களுக்காகத் திட்டங்களை முன்னின்று நிறைவேற்றுவீர்கள். சோம்பலைத் தவிர்த்து, காரியங்களில் சுறு சுறுப்பைக் கூட்டவும்.

**பெண்கள்:** கணவருடனான உறவு சீர்படும். குடும்பத்தில் சந்தோஷம் காணப்படும். உறவினர்களுடன் உறவு மேம்படும். தெய்வ பலம் கூடும். உடல் ஆரோக்கியம் பேணவும். வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவும்.

**மாணவர்கள்:** கடுமையாக முயற்சித்து, தடைகளை உடைத்தெறிந்து வெற்றி வாகை சூடுவீர்கள். விளையாட்டிலும் வெற்றி பெறுவீர்கள். மகிழ்ச்சி உண்டாகும்.

**பரிகாரம்:** ஸ்ரீவிநாயகரை வழிபடவும்.

# ஆய்வரங்க தொடர்

யாழ்ப்பாணம், ஜன. 27

தேசிய கலை இலக்கியப் பேரவையின் (1973 - 2023) ஐம்பதாவது ஆண்டை முன்னிட்டு நடத்தப்படுகின்ற மாதாந்த ஆய்வரங்கத் தொடரின் முதல் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

“மேலாதிக்கத்துக்கு எதிரான அரங்கு“ என்ற தலைப்பில் நடைபெறவுள்ள இந்த ஆய்வரங்கில் தலைமையுரையை நாடகக் கலைஞரும் சமூக செயல்பாட்டாளருமான க. சத்தியசீலன் வழங்குவார்.

ஆய்வு உரையை அரங்கவியலாளரும் செயல்திறன் அரங்க இயக்கத்தின் இயக்குநருமான தேவநாயகம் தேவானந், கருத்துரையை பொறியியலாளரும் அரங்க செயல்பாட்டாளருமான மாவை நித்தியானந்தன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் நடைபெறும். ஆர்வமுள்ள அனைவரையும் இந்த ஆய்வரங்கில் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# கிரிக்கெட் வீரரின் தந்தை கொலை 4 வருடத்தின் பின் சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஜன. 27

கிரிக்கெட் வீரர் தனஞ்சய டி சில்வாவின் தந்தையின் கொலை தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் சம்பவம் இடம்பெற்று நான்கு வருடங்களின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரஞ்சன் டி சில்வா கொலைச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்தவர் இரத்மலானையைச் சேர்ந்த ‘கொட்டிய’ என அழைக்கப்படும் மலிந்து லக்மால் என்பவராவர்.

தெகிவளை - கல்கிசை மாநகர சபை உறுப்பினர் ரஞ்சன் டி சில்வா 2018 மே 24 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

கல்கிசை பொலிஸ் பிரிவின் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ‘கொட்டிய’ கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ரஞ்சன் டி சில்வா கொலையுடன் சந்தேக நபர் நேரடியாக தொடர்புடையவர் என்பதும் அங்குலான சயுரு புர அடுக்குமாடி குடியிருப்புக்கு அருகில் தங்கியிருந்தவர் என்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய சின்ஹார அமல் சமிந்த சில்வா என்றழைக்கப்படும் ‘குடு அஞ்சு’ என்பவரின் நெருங்கிய உறவினரும், பாதாள உலகக் கும்பல் எல்லவல லியனகே தர்மசிறி என்றழைக்கப்படும் ‘பாட்டியா’வின் நெருங்கிய கூட்டாளியும் என்பதும் தெரிய வந்துள்ளது. (ஐ)

# யாழ். கலாசார நிலையத்தில் இந்திய குடியரசு தினம் சிறப்பு







யாழ்ப்பாணம், ஜன. 27

இந்தியாவின் 74ஆவது குடியரசு தின நிகழ்வு யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தியாவின் 74ஆவது குடியரசு தின விசேட நிகழ்வு யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மதத் தலைவர்கள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச திணைக்களங்களின் தலைவர்கள் முப்படைகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

குடியரசு தின நிகழ்வின் விசேட நிகழ்வாக இந்திய கலைஞர்கள் பங்குபற்றிய ரிதம் ஒவ் காமெனி எனும் விசேட இசை நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது. (ஐ - 03)

## கல்வி tv CHANNEL-1

**27.01.2023**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**27.01.2023**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மலேசியா - மட்டக்களப்பு றோட்டரிகள் ஒப்பந்தம்

மட்டக்களப்பு, ஜன. 27

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி, சுகாதார சமூகநல அபிவிருத்தித் திட்டங்களுக்கான பல கோடி ரூபாய் பெறுமதியான உடன்படிக்கை மலேசிய - மட்டக்களப்பு றோட்டரி கழகங்களுக்கு இடையே, கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையில் மட்டக்களப்பு றோட்டரிக் கழகத் தலைவர் றோட்டரியன் பு. ரமணன், கோலாலம்பூர் மத்தி றோட்டரிக் கழக தலைவி றோட்டரியன் அஞ்சலினா ஆரோக்கியசாமி ஆகியோர் கைச்சாத்திட்டனர். மேலும், மலேசிய மாவட்ட றோட்டரி ஆளுநர் ராஜசேகரன் பிண்டி, கனகேஸ்வரி சுப்பையா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (அ)







# மட்டக்களப்பு குசனார்மலைக்கு சுவிஸ் தூதுவர் திடீரென விஜயம்!

மட்டக்களப்பு, ஜன. 27

கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ள சுவிஸ் தூதுவர் டொமிங்க் பேர்கிலர் மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் விஜயத்தை மேற்கொண்டார்.

இதன்போது மாவட்டத்தில் தொல்லியல் செயலணி ஊடாக தமிழர்களின் பாரம்பரிய இடங்களை தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பில் தூதுவரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து இந்த விஜயத்தை முன்னெடுத்தார்.

குசனார்மலைக்கு வருகைதந்த தூதுவரை பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் கிராம மக்கள் வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து மலையில் உள்ள முருகன் ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெற்றதுடன் தூதுவருக்கு ஆசியும் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து குசனார்மலையின் நிலைமைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன் அப்பகுதியில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும் தூதுவர் ஆராய்ந்தார். (அ)

# பூசை தட்டில் வைத்த பணம் தங்கத்துடன் மாயமாகியது

மட்டக்கலப்பு, ஜன. 27

மட்டக்களப்பு நகரிலுள்ள வீட்டில் செய்வினை இருப்பதாக தெரிவித்து, பூசை தட்டில் வைத்த பணத்தையும் தங்க ஆபரணத்தையும் திருடிச் சென்ற இளம் பெண் பூசாரியை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் கைது செய்தனர்.

கொக்கட்டிச்சோலை, கடுக்காய்முனையைச் சேர்ந்த பெண், மட்டக்களப்பு நகரில் வாழ்ந்துவரும் அறிமுகமானவர்களது வீட்டுக்கு 2022 டிசெம்பர் 22ஆம் திகதி சென்றுள்ளார்.

இதன்போது, அந்த வீட்டில் செய்வினை இருப்பதாகவும் நான் நாககன்னி தெய்வம் ஆடி, அதை அகற்றித் தருகிறேன் எனவும் பெண் போலி பூசாரி தெரிவித்ததையடுத்து வீட்டின் உரிமையாளரும் பூசை செய்ய உடன்பட்டார்.

இதையடுத்து, அன்றைய தினம் இரவு செய்வினையை அகற்றுவதற்கான பூசை ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது, பூசை தட்டில் 60 ஆயிரம் ரூபாய் பணமும் தங்க ஆபரணங்களும் வைக்கவேண்டும் எனக் கோரியதையடுத்து, அதைப் பூசை தட்டில் வைத்து, வெள்ளை துணியால் மூடிக்கட்டிய வாறு அறையில் பூசை நடைபெற்று முடிந்தது.

இதன் பின்னர், பூசாரி அந்த அறைக் கதவை மூடிவிட்டு, கதவை 10 தினங்களுக்கு திறக்கக்கூடாது அங்கு நாக கன்னி உலாவருவார். 10 தினங்களின் பின்னர், நான் வந்து கதவை திறந்து, வெள்ளைத் துணியால் கட்டிவைக்கப்பட்ட பூசைத் தட்டை அவிழ்த்துத் தருவேன் எனக்கூறி அங்கிருந்து சென்றுள்ளார். 10 நாள்கள் முடிந்ததும் வீட்டின் உரிமை யாளர், பூசாரியின் அலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தியபோது, அந்தத் தொலைபேசி நிறுத்தப்பட்டிருந்தது.

பின்னர், பூசை அறைக் கதவை திறந்து, துணியால் கட்டி வைக்கப்பட்ட பூசை தட்டை அவிழ்த்துப் பார்த்தபோது, தட்டில் வைக்கப்பட்ட 60 ஆயிரம் ரூபாயையும் தங்க மோதிரத்தையும் பெண் பூசாரி திருடிச்சென்றுள்ளமை தெரியவந்தது

இது தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டதுடன் இவர், கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் பல வீடுகளில் செய்வினை இருப்பதாகவும் அதனை எடுத்து தருவதாக தெரிவித்தும் பணம், தங்க ஆபரணங்களை திருடிய ஆறுக்கும் மேற்பட்ட வழக்குகள் இருப்பதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# திறன்மிக்க பெண்களை வலுவூட்டும் செயலமர்வு

அம்பாறை, ஜன. 27

சமாதானமும் சமூகப்பணி நிறுவனத்தால், நல்லிணக்கத்துக்காக சிவில், சமூக தலைமைத்தும் மிக்க பெண்களை அடையாளப்படுத்தி, வலுவூட்டும் நிகழ்வு, கல்முனை பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.




சிவில் சமூக அங்கத் தவர்கள் என்ற அடிப் படையில், கடந்த காலங்களில் தங்களின் வகிபாகம் எவ்வாறு காணப் பட்டது, தற்காலத்தில் சிவில் சமூகத்தின் வகிபாகம் எவ்வாறு காணப்படவேண்டும் என்ற விடயமும் கல்முனை பிரதேசத்தில் நல்லிணக்கத்துக்கு சவாலாக காணப்படும் விடயங்களை அடையாளம் கண்டு, எவ்வாறு எதிர்காலத்தில் அவற்றுக்கான சமூக முன்னெடுப்புகளை மேற்கொள்வது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது .

கல்முனை பிரதேச நல்லிணக்கக் குழு மற்றும் அம்பாறை மாவட்ட நல்லிணக்கக் குழு இணைப்பாளர் எஸ்.எல் அப்துல் அஸீஸின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சமாதானமும் சமூகப்பணி நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் டி. ராஜேந்திரன், அரச சார்பாற்ற நிறுவனங்களின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஐ. எல்.எம் இர்பான், நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்களான கே. ரோகினி, எம்.எல்.ஏ மாஜீத் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# மட்டக்களப்பு அரச வங்கி ஒன்றிலிருந்து ரூ.2 கோடி பெறுமதியான தங்கம் மாயம்

## குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு

மட்டக்களப்பு, ஜன. 27

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் உள்ள அரச வங்கியொன்றில் இருந்து 2 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான தங்க நகை காணாமற்போயுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தங்க நகை கடனைப் பெறுவதற்காக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் கையிருப்பை புதுப்பிக்க வாடிக்கையாளர் ஒருவர் வங்கிக்குச் சென்றபோது, தங்கம் அடங்கிய பொட்டலம் பெட்டகத்தில் இல்லை என்பது முதலில் தெரியவந்ததாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

அந்த வங்கியின் முகாமையாளர் தலைமைக் காரியாலயத்திற்குச் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் அரச வங்கியின் மட்டக்களப்பு தலைமை அலுவலக அதிகாரிகள் மேற்கொண்ட ஆரம்ப கட்ட உள்ளகப் பரிசோதனையின்போது, அடகு வைக்கப்பட்டுள்ள தங்கப் பொருட்களைத் தவிர, வாடிக்கையாளர், மற்ற 12 வாடிக்கையாளர்களின் தங்கப் பொருட்கள் அடங்கிய பொதிகளையும் காணவில்லை என மூத்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

2022 ஜனவரி முதல் டிசெம்பர் வரை தங்க பாதுகாப்பு கடன் பெறுவதற்காக வாடிக்கையாளர்கள் வங்கியில் அடகு வைத்த தங்கப் பொருட்கள் காணாமற் போய்விட்டதாக புகார் மனுவில் கூறப்பட்டுள்ளது.

அரச வங்கியின் மட்டக்களப்பு பிரதான காரியாலயத்தின் பிராந்திய முகாமையாளர், குறித்த தங்கம் கையிருப்பு காணாமற்போனமை தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

வாடிக்கையாளர்கள் அடகு வைத்துள்ள தங்க நகை வைக்கப்பட்டிருந்த பெட்டகத்தின் இரண்டு சாவிகள் வங்கியின் இரண்டு அதிகாரிகளின் வசம் இருந்ததாகவும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான தங்கம் காணாமல்போனமை தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம்பிக்க குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசேட பொலிஸ் குழுவொன்று மட்டக்களப்பு செல்லவுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மேலும் கூறினார். (அ)

# 31 சக்தி வாய்ந்த போர் டாங்கிகளை உக்ரைனுக்கு அனுப்பும் அமெரிக்கா!

## ஜேர்மனியுடன் இணைந்து இந்த நடவடிக்கை

லண்டன், ஜன. 27

ரஷ்யாவின் படையெடுப்பிற்கு எதிரான போராட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் வகையில் ஜேர்மனியுடன் இணைந்து 31 சக்திவாய்ந்த போர் டாங்கிகளை உக்ரைனுக்கு அனுப்ப அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

ஜேர்மனி தனது லெபார்ட் 2 டாங்கிகளில் 14 ஐ போர்க்களத்திற்கு அனுப்புவதாக கூறிய சில மணிநேரங்களில் எம்-1 அப்ராம்ஸ் டாங்கிகளை வழங்குவதற்கான அமெரிக்காவின் முடிவு அறிவிக்கப்பட்டது.

உக்ரைன் பல மாதங்களாக இராணுவ உபகரணங்களை அனுப்ப மேற்கத்திய நட்பு நாடுகளை வலியுறுத்தி வருகின்ற நிலையில் இந்த செய்தி வந்துள்ளது.

ரஷ்யா படையெடுத்து ஏறக்குறைய ஒரு வருடத்தை நெருங்கியுள்ள நிலையில், உக்ரைன் இராணுவம் அதன் வேகத்தை மீண்டும் பெறவும், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தை திரும்பப் பெறவும் அனுமதிக்கும் ஒரு திருப்புமுனையாக இந்த அறிவிப்புகள் உள்ளதாக உக்ரைன் கூறியுள்ளது.




மேலும், வசந்த காலத்தில் சாத்தியமான ரஷ்ய தாக்குதலைத் தடுக்க டாங்கிகள் உதவக்கூடும் என்று உக்ரைன் கூறியது.

எனினும், அமெரிக்காவால் வழங்கப்பட்டுள்ள எம்-1 அப்ராம்ஸ் டாங்கிகளை பராமரிப்பது விலை உயர்ந்தது மற்றும் உக்ரைனிய துருப்புக்கள் கையாளுவது மிகவும் சவாலானது என கூறியுள்ளது. (அ)

# டாங்கி அனுப்பிய மேற்கு நாடுகளுக்கு நன்றி கூறினார் உக்ரைன் ஜனாதிபதி

கீவ், ஜன. 27

ரஷ்யாவுக்கு எதிரான போருக்கு ஆதரவாக டாங்கிகளை அனுப்பிய மேற்கத்திய நாடுகளின் தலைவர்களுக்கு உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் செலென்ஸ்கி நன்றி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அவர்களது அறிவிப்பின் பிரகாரம் அவை விரைவாக வழங்கப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அத்துடன், தனது இரவு உரையில் மேற்கு நாடுகளை நீண்ட தூர ஏவுகணைகள் மற்றும் போர் விமானங்களை அனுப்புமாறு அவர் வலியுறுத்தினார்.

அமெரிக்காவும் ஜேர்மனியும் ஆப்ராம்ஸ் மற்றும் சிறுத்தை டாங்கிகளை உக்ரைனுக்கு அனுப்புவதாக அறிவித்ததை அடுத்து அவரது கருத்துக்கள் வந்துள்ளன.

அமெரிக்கா மற்றும் ஜேர்மனியின் இந்த அறிவிப்பை அப்பட்டமான ஆத்திரமூட்டல் என்று கண்டித்துள்ள ரஷ்யா, வழங்கப்பட்ட அனைத்து டாங்கிகளும் அழிக்கப்படும் என்று எச்சரித்துள்ளது.



உக்ரைனுக்கு 31 எம்1 ஆப்ராம்ஸ் போர் டாங்கிகளை அனுப்புவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் புதன்கிழமை அறிவித்தார். ஜேர்மனி தனது 14 சிறுத்தை-2 டாங்கிகளை உக்ரைனிய போர்க்களத்திற்கு அனுப்புவதாக கூறிய சில மணிநேரங்களில் டாங்கிகளை வழங்குவதற்கான முடிவு அறிவிக்கப்பட்டது. (அ)

# தேசிய தினமா? ஆக்கிரமிப்பு தினமா? பிளவுபட்டு நின்றது அவுஸ்திரேலியா



கான்பரா, ஜன. 28

அவுஸ்திரேலியாவின் பல நகரங்களில் இடம்பெற்ற படையெடுப்பு நாள் ஆர்ப்பாட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

அவுஸ்திரேலியாவின் தேசிய தினத்தை படையெடுப்பு தினமாக கருதி பல நகரங்களில் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

1788 இல் சிட்னிகோவில் குற்றவாளிகளுடன் பிரிட்டிஸ் கடற்படையினர் முதன்முதலில் தரையிறங்கிய நாளே - ஜனவரி 26 அவுஸ்திரேலிய தினமாக நினைவுகூரப்படுகின்றது.

இதுவே அவுஸ்திரேலியாவில் ஐரோப்பிய குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்தது.

இந்த தினத்தை ஆக்கிரமிப்பு தினம் என தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

அவுஸ்திரேலியாவின் காலனித்துவ வரலாறு குறித்து கடும் விவாதங்களும் அரசியல் சர்ச்சைகளும் இடம்பெற்று வரும் நிலையில் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

நாங்கள் பொய் சொல்வதை நிறுத்தவேண்டும் என பேராசிரியர் மார்சியா லாங்டொன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் தேசிய தினம் குடியேற்றத்தை கொண்டாடுவதாக காணப்படக்கூடாது என அவர் தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய தினம் என்பதே மிகப்பெரிய பொய் என குறிப்பிட்டுள்ள அவர், நாங்கள் பொருத்தமான தினத்தை கண்டுபிடிக்கவேண்டும். அதன் பின்னர் நாங்கள் அவுஸ்திரேலிய வரலாறு குறித்த உண்மையை தெரிவிக்க ஆரம்பிக்கலாம் எனவும் குறிப்பிட்டார். (அ)




# முடங்கிய மைக்ரோசொப்ட்

நியூயோர்க், ஜன. 27

உலகம் முழுவதும் நேற்று முன் தினம் மைக்ரோசொப்டின் வெளியக குழுக்கள், மைக்ரோசொப்ட் 365 போன்றவற்றின் சேவைகள் பல மணி நேரம் முடங்கின.

வெளியக சேவை முடங்கியதால் மின்னஞ்சல்களை அனுப்பவும், பெறவும் முடியமால் போனதாக பயனர்கள் தெரிவித்தனர்.

உலகம் முழுவதும் பாதிப்பு இருந்தபோதும் இந்திய பயனர்களே அதிகம் முறைப்பாடு தெரிவித்ததாக சொல்லப்படுகிறது.

அதேபோல் ஜப்பான், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகளின் பயனர்களும் மைக்ரோசொப்டின் சேவைகள் முடங்கியதாக முறைப்பாடு அளித்தனர்.

அதை தொடர்ந்து, மைக்ரோசொப்ட் 365 ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், இணையத்தில் சிக்கல் இருந்ததாகவும், அதற்கு தீர்வு காணும் பணியில் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஈடுபட்டு இருப்பதாகவும் மேற்கொண்டு தாக்கம் ஏதும் இல்லாமல் இருக்கும் வகையில் கவனம் செலுத்தி வருவதாகவும் கூறப்பட்டது. (அ)

# தெற்கு ஸ்பெயினில் உள்ள ஆலயங்களில் கத்திக்குத்து

## ஒருவர் உயிரிழப்பு! ஒருவர் காயம்!

மட்ரிட், ஜன. 27

தெற்கு ஸ்பெயினில் உள்ள இரண்டு தேவாலயங்களில் நடத்தப்பட்ட கத்திக்குத்து தாக்குதல்களில், ஒருவர் உயிரிழந்ததோடு ஒருவர் காயமடைந்துள்ளார்.

உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, முதலில் அல்ஜிசிராஸில் உள்ள சான் இசிட்ரோ தேவாலயத்திற்குள் புகுந்த தாக்குதல்தாரி பாதிரியாரை கத்தியால் தாக்கி காயப்படுத்தியதாகவும் பின்னர் நியூஸ்ட்ரா செனோரா டி லா பால்மா தேவாலயத்திற்குள் நுழைந்து வெர்ஜரை தாக்கியதில் அவர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில நிமிடங்களுக்குப் பிறகு, தாக்குதல்தாரி நிராயுதபாணியாக்கப்பட்டு கைது செய்யப்பட்டதாக உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தை பயங்கரவாதத்துடன் தொடர்புடையதாக கருதும் புலனாய்வாளர்கள், இதுகுறித்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த பயங்கரமான தாக்குதலில் இறந்த வெர்ஜரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் பெட்ரோ சான்செஸ் தனது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)









# பாபர் அஸாம், நட்டாலி சிறந்த வீரர்களாக தெரிவு

டுபாய், ஜன. 27

வருடத்தின் அதிசிறந்த ஐ. சி. சி. கிரிக்கெட் வீரருக்கான சேர் ஜோன் கோர்பீல்ட் விருதை பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அஸாம் வென்றெடுத்தார்.

வருடத்தின் அதிசிறந்த ஐ. சி. சி. கிரிக்கெட் வீராங்கனைக்கான ரஷேல் ஹேவோ விருது இங்கிலாந்தின் நட்டாலி சிவருக்கு கிடைத்துள்ளது.

வருடத்தின் அதிசிறந்த ஐ. சி. சி. ஒரு நாள் கிரிக்கெட் வீரருக்கான விருதை பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அஸாம் இரண்டாவது தொடர்ச்சியான தடவையாக வென்றெடுத்துள்ளார்.

வருடத்தின் அதிசிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரருக்கான விருதை இங்கிலாந்து அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் தனதாக்கிக் கொண்டார்.

வருடத்தின் அதிசிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீராங்கனைக்கான விருதை இங்கிலாந்தின் நட்டாலி சிவர் வென்றெடுத்தார்.

வருடத்தின் அதிசிறந்த மகளிர் இருபது 20 கிரிக்கெட் வீராங்கனையாக அவுஸ்திரேலியாவின் தஹிலா மெக்ரா தெரிவானார்.

வருடத்தின் அதிசிறந்த மத்தியஸ்தராக இங்கிலாந்தின் ரிச்சர்ட் இலிங்வேர்த் தெரிவானார். (ஐ)

# சானியா மிர்சா இணை இறுதிக்கு முன்னேற்றம்!



மெல்பர்ன், ஜன. 27

அவுஸ்திரேலியன் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் இறுதிச் சுற்றுக்கு இந்தியாவின் சானியா மிர்சா - போபண்ணா இணை முன்னேறியுள்ளது.

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலியன் ஓப்பன் ரென்னிஸ் போட்டி மெல்பர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில், கலப்பு இரட்டையர் அரையிறுதிச் சுற்றில் சானியா - போபண்ணா இணையுடன், பிரிட்டனின் நீல் ஸ்கப்ஸ்கி, அமெரிக்காவின் தேசிரே கிராவ்சிக் இணை மோதியது.

இதில் சானியா இணை 7-6 (5), 6-7 (5), 10-6 என்ற செற் கணக்கில் நீல்-தேசிரே இணையை வீழ்த்தி இறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளது. சுமார் ஒரு மணி நேரம் 52 நிமிடங்கள் வரை இந்த ஆட்டம் நீடித்தது.

இதுவரை கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் 6 பட்டங்களை சானியா கைப்பற்றியுள்ளார். மகளிர் இரட்டையர் பிரிவில் 3 பட்டங்களையும், கலப்பு இரட்டையர் பிரிவில் 3 பட்டங்களையும் அவர் வென்றுள்ளார்.

இந்த கலப்பு இரட்டையர் போட்டியில் வெற்றி பெற்றால் அவரது கிராண்ட்ஸ்லாம் பட்டங்களின் எண்ணிக்கை 7ஆக உயர்ந்துவிடும். (ஐ)



# அவுஸ்திரேலிய ஓப்பன் ரிபகினா இறுதியாட்டத்தில்!

மெல்பர்ன், ஜன. 27

பிரபல வீராங்கனையான அசரங்காவை வீழ்த்தி முதன்முறையாக அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார் ரிபகினா.

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலியன் ஓப்பன் ரென்னிஸ் போட்டி மெல்பர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில், நேற்று நடந்த அரையிறுதி ஆட்டத்தில் கஜகஸ்தானின் எலெனா ரிபகினா - பெலாரஸின் விக்ரோறியா அசரங்கா மோதினர்.

முதல் சுற்று ஆட்டத்தில் இருவரும் கடுமையாக மோதிக் கொண்டனர். எனினும், ரிபகினா 7 - 6 (7 - 4) என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

ஆனால், இரண்டாவது சுற்று ஆட்டத்தில் போராட்டம் அளிக்காமலே அசரங்கா 3 - 6 என்ற செற் கணக்கில் வீழ்ந்தார்.

இந்த வெற்றியின் மூலம் ரிபகினா இறுதியாட்டத்துக்கு முன்னேறினார்.

# மகளிர் ஐ. பி. எல். அணிகள் 21,149 கோடி ரூபாய்க்கு ஏலம்

மும்பை, ஜன. 27

மகளிர் ஐ. பி. எல். மூலமாக 4 ஆயிரத்து 699 கோடி இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 21 ஆயிரத்து 149 கோடி ரூபாய் திரட்டப்பட்டுள்ளது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி. சி. சி. ஐ.) தெரிவித்துள்ளது.

மகளிர் ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரில் கலந்து கொள்ளும் அணிகளுக்கான ஏலம் மும்பையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தத் தொடரில் அகமதாபாத், மும்பை, பெங்களூரு, டில்லி, லக்னோ ஆகிய நகரங்களை முன்னிலைப்படுத்தும் அணிகள் போட்டியிடுகின்றன. அதன் தொடர்ச்சியாகவே நேற்று மகளிர் ஐ. பி. எல். ஏலம் நடத்தப்பட்டது. இதில் அகமதாபாத் அணியை ரூ. 1,289 கோடி (இந்திய) ரூபாய்க்கு அதானி குழுமம் வாங்கியுள்ளது.

மும்பை அணியை 912 கோடி (இந்திய) ரூபாய்க்கு இந்தியா வின் ஸ்போர்ட்ஸ் நிறுவனமும், பெங்களூர் அணியை 901 கோடி (இந்திய) ரூபாய்க்கு றோயல் சலஞ்சர்ஸ் நிறுவனமும், டில்லிஅணியை 810 கோடி (இந்திய) ரூபாய்க்கு ஜேஎஸ்டபிள்யூ ஜிஎம்ஆர் நிறுவனமும் வாங்கியுள்ளன.

கேப்ரி குளோபல் ஹோல்டிங்ஸ் குழுமம் 757 கோடி (இந்திய) ரூபாய்க்கு லக்னோ அணியை வாங்கியுள்ளது.

2008இல் ஆடவர் ஐ. பி. எல். போட்டி தொடங்கப்பட்டபோது கிடைத்த ஏலத்தொகையை விடவும் தற்போது அதிகத்தொகை கிடைத்துள்ளது என்றும் அணிகளின் ஏலம் மூலமாக 4,669 (இந்திய) ரூபாய்க்கு கிடைத்துள்ளது என்றும் பி. சி. சி. ஐ. செயலாளர் ஜெய் ஷா தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.




# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் இறுதியில் ஜொகோவிச்!



மெல்பர்ன், ஜன. 27

முன்னிலை வீரர் நோவக் ஜொகோவிச் அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலியன் ஓப்பன் ரென்னிஸ் போட்டி மெல்பர்ன் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில், நேற்று நடந்த அரையிறுதி ஆட்டத்தில் முன்னிலை வீரர் ஜொகோவிச், அந்த்ரே ரூபலெவை எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியை ஜெகோவிச் 6 -1, 6 - 2, 6 - 4 என்ற செற் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறினார்.



## உயிரிழந்த தமிழ் இராணுவ அதிகாரிக்கு யாழில் 21 வேட்டுகள் முழங்க மரியாதை

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ். - கீரிமலை பகுதியில் உயிரிழந்த ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான சுந்தரம் அருளம்பலத்துக்கு 21 வேட்டுகள் முழங்க நேற்று இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

இவர் கடந்த 1958 ஆம் ஆண்டு இராணுவத்தில் கடமையில் இணைந்து, 1980ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். இந் நிலையில் அவர் மூப்பு காரணமாக கடந்த 23 ஆம் திகதி கீரிமலையில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

அவரது இறுதிச் சடங்குகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, கீரிமலை இந்து மயானத்தில் 21 துப்பாக்கி வேட்டுக்கள் முழங்க இராணுவ மரியாதையுடன் அவரது உடல் தீயில் சங்கமமானது. இந்த இறுதி நிகழ்வில் யாழ். இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் போத்தொட்ட, இராணுவ படைப் பிரிவு அதிகாரிகள், இராணுவ சிப்பாய்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## மீற்றர் வட்டிக்கு கொடுத்த பணத்தை வசூலிப்பதற்காக கடத்தி சித்திரவதை!

### தொடர்புடையோரை அடையாளம் காண உதவுமாறு யாழ். பொலிஸார் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜன. 27

**யாழ்ப்பாணத்தில் மீற்றர் வட்டிக்கு பணம் கொடுத்தவர்களிடம் பணத்தை மீள வசூலிப்பதற்காக அடித்துத் துன்புறுத்திய சம்பவத்துடன் தொடர்புடையோரை அடையாளம் காண உதவுமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரியுள்ளனர்.**



மீற்றர் வட்டிக்கு பணம் பெற்ற இருவரை தோட்டக் காணி ஒன்றுக்கு அழைத்து வந்து கொடூரமாகத் தாக்கி துன்புறுத்தும் காணொளி சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றது.

இந்த காணொளி தொடர்பில் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்துபவர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தோர் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ தகவல் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் பொலிஸாருக்கு தொடர்புள்ளதா என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

## இந்திய குடியரசு தின நிகழ்வு யாழ். துணைத் தூதரகத்தில்



யாழ்ப்பாணம், ஜன. 27

இந்தியாவின் 74 ஆவது குடியரசு தின நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவராலய அலுவலகத்தில் இந்தியாவின் காவல்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையோடு ஆரம்பமாகிய குடியரசு தின நிகழ்வில் யாழ். இந்தியத் துணை தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் இந்திய தேசியக்கொடியை ஏற்றினார். பின்னர் இந்தியாவின் தேசிய கீதம் இசைக்கப்பட்டதோடு இந்திய குடியரசு தலைவரின் சிறப்புரையும் யாழ்.இந்திய துணை தூதுவரால் வாசிக்கப்பட்டது.

இந்திய காவல் படையினரால் நாட்டுப்பண் இசைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ் இந்திய துணை தூதரக அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)



## யாழ். மாநகர முதல்வரிடம் அதிகாரங்கள் கையளிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஏற்படும் அத்தியாவசிய செலவுகளை மேற்கொள்வதற்கு மாநகர முதல்வருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அறிவித்துள்ளார்.

மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கடந்த வருடம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படாத காரணத்தினால், இம்மாதம் 20 ஆம் திகதி முதல் 14 நாள்களுக்கு மாநகர சபையில் ஏற்படும் அத்தியாவசிய செலவுகளை மேற்கொள்வதற்கு மாநகர முதல்வருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தலை அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக ஆளுநர் பிறப்பித்துள்ளார்.

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2(1)(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 326 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மூலம் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநரின் அறிவித்தலின் படி, இம்மாதம் 20 ஆம் திகதி முதல் 14 நாள்களுக்கு அல்லது 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்படும் வரை சம்பளங்களும் படிகளும், பயணப் படிகள், வழங்கு பொருள்களும் தேவைப் பொருள்களும், ஏற்றியிறக்கல் தொலைத்தொடர்பு மற்றும் பயன்பாட்டு சேவைகள், பழுதுபார்த்தலும் பராமரித்தலும், வட்டிக் கொடுப்பனவு, சபை ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் இலங்கை வங்கி லீசிங் கொடுப்பனவு ஆகிய செலவுகளை 2023 ஆம் ஆண்டு உத்தேச மதிப்பீட்டுக்கு அமைவாக செவுகளை மேற்கொள்வதற்கு யாழ். மாநகர முதல்வருக்கு அங்கீ காரம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

## தேர்தல் நடத்துவது பொருத்தமானதா?

### கேட்கிறார் மதுர விதானகே

கொழும்பு, ஜன. 27

தேர்தலுக்குச் செல்வது பொருத்தமானதா என சிந்தித்து பார்க்கவேண்டும் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தாங்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குத் தயாராகவே இருப்பதாகவும், எனினும், இப்போது நாடு இருக்கின்ற நிலையில் தேர்தலை ஒத்திப்போடுவதே சிறந்தது என அவர் தெரிவித்தார். அதில் மிஞ்சும் பணத்தை எடுத்து பொருளாதாரத் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தேர்தலை மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒத்திப்போடுவது நல்லது என்பதுதான் தனது நிலைப்பாடு எனவும் அவர் மேலும் கூறினார்.(அ)

## மனைவி வெளிநாடு செல்வதை தடுக்க மகனுக்கு விஷத்தை கொடுத்த தந்தை!

கொழும்பு, ஜன. 27

பொலனறுவையில் மனைவி வெளிநாடு செல்வதனை தடுப்பதற்காக 12 வயது மகனுக்கு விஷம் கொடுத்த தந்தை ஒருவர் நேற்று முன் தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பொலனறுவை உள்ள கிராமம் ஒன்றை சேர்ந்த 48 வயதுடைய தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது 12 வயது மகனுக்கு விஷம் கொடுத்ததையடுத்து, மகன் பொலனறுவை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தந்தைக்கும், தாய்க்கும் இடையே ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக சில காலமாக பிரிந்து வாழ்ந்து வருகின்றனர்.

நேற்று முன் தினம் மாலை மகன் தனது தந்தையின் வீட்டுக்குச் சென்றபோது, மகனுக்கு விஷம் கொடுக்கப்பட்டுள்ளது.

மனைவியை வீட்டுக்கு அழைத்து வருவதற்காக மகனுக்கு விஷம் கொடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். தந்தை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மகனுக்கு தந்தை விஷம் கொடுத்த செய்தி அறிந்த தாய் தந்தை வாழ்ந்த வீட்டுக்கு வந்துள்ளார்.

பின்னர், விஷம் அருந்திய மகனை வைத்தியசாலையில் சேர்க்க தாய் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மகனிடம் வாக்குமூலம் பதிவு செய்யும்போது, தாய் வெளிநாடு செல்வதைத் தடுக்கும் வகையில் தந்தை விஷம் குடிக்குமாறு மகனுக்கு அழுத்தம் கொடுத்தார் என அவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

(அ)

## வட்டிக்கு பணம் வாங்கியவர்களை...

நெருங்கிய தொடர்பு இருப்பதும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மீற்றர் வட்டிக்கு பணம் பெற்ற இருவரை தோட்டக் காணி ஒன்றுக்கு அழைத்து வந்து கொடூரமாகத் தாக்கி துன்புறுத்தும் காணொலி அண்மையில் சமூக ஊடகங்களில் பிரபலமானது. இது தொடர்பில் வட மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது.

தாக்குதல் நடத்துபவர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தோர் வட மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ தகவல் வழங்குமாறு கோரப்பட்டிருந்தது.

மீற்றர் வட்டிக்கு வழங்கிவிட்டு பணத்தை மீள வசூலிப்பதற்காக வர்த்தகர்களை அடித்துத் துன்புறுத்தும் இருபதுக்கும் மேற்பட்ட காணொலிகள் பொலிஸ் உயர்மட்டத்துக்கு அனுப்பப்பட்டன.

இவற்றின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சுன்னாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சுன்னாகத்தில் ஒருவரை கொல்ல முயன்ற சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த மூவருக்கும் தொடர்பு இருப்பது தெரிய வந்தது.

இவர்கள், மருதனார்மடம் சந்தைக்கு அண்மையாக உள்ள தோட்டக் காணிக்கு அழைத்தே பலரை அடித்துத் துன்புறுத்தியும் அச்சுறுத்தியும் உள்ளனர் என்பதும் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தக் கும்பலுடன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலுள்ள பொலிஸ் அதிகாரிக்கும் நெருங்கிய தொடர்புள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு வழங்கச் சென்றாலும் அவர் திருப்பி அனுப்பி விடுவார் என்றும் விசாரணைகளில் தெரிய வந்தது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுத்து சட்டத்துக்குப் புறம்பாக செயல்படுவோர் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய பொலிஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பொலிஸ் உயர்மட்டத்துக்கு அறிவுறுத்தியுள்ளார். (ஐ-03)

## கோப்பாயில்...

பிள்ளையின் தந்தை கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில், கோப்பாய் பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை நடத்தினர். இதில், மனைவியும் அவரை சார்ந்த குடும்பத்தினருமே அஜித்தை கொன்றதாக தெரிய வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கொல்லப்பட்டவர் கோப்பாய் சந்தியில் மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையம் ஒன்றை நடத்தி வந்துள்ளார். மனைவியுடன் அவரின் குடும்பத்தினருடன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்துள்ளார்.

இந்நிலையில், சீதனம் தொடர்பாக இவர்களுக்குள் ஏற்கனவே பிரச்னை ஒன்று இருந்தது. கொலைக்கு முன்னர், இவருக்கும் இவரின் மாமனாருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. இதையடுத்து அவர் அஜித்தை வீட்டைவிட்டு வெளியேறுமாறு கூறியுள்ளார். ஒரு மாதத்தில் வெளியேறுவதாக அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், கொலை நடந்த அன்றைய தினம் அஜித் தோட்ட வெளியில் வரும்போது அவரை மாமனார் ஆள் வைத்து அடித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை அவ்விடத்திலேயே போட்டுவிட்டு மனைவியை கூப்பிட்டவாறு நொண்டியவாறு அஜித் வீட்டுக்கு ஓடியுள்ளார். வீட்டாரிடம் தன்னை அடித்தது யார் என்று தெரியும் என்று கூறி அழுதுள்ளார்.

அவர் பொலிஸில் சொல்லிவிடுவார் என்ற அச்சத்தில் கதவு தாழ்பாள் (றீப்பை கட்டை) உலக்கை உள்ளிட்டவைகளால் அவரை தாக்கி குடும்பத்தினரே கொலை செய்துள்ளனர். பின்னர் தாங்களாகவே அம்புலன்ஸுக்கு அறிவித்துவிட்டு வாள்வெட்டுக் குழு வந்து அவரை வெட்டிவிட்டதாக பொலிஸாருக்கும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், வாள்வெட்டு குழு வீட்டை தாக்கியது போன்று தாங்களாகவே வீட்டின் கண்ணாடிகளை அடித்து உடைத்து சம்பவத்தை திசை திருப்பியமை பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்தது.

மேலும், பொலிஸாரின் விசாரணையின்போது வாள்வெட்டு குழு வந்து அச்சுறுத்தியதால் தாம் வீட்டிலிருந்து ஓடிவிட்டதாகவும் கூறி நாடகமாடியுள்ளனர்.

பொலிஸாரின் புலன் விசாரணையில் இந்தக் கொலை திட்டமிட்ட நாடகம் என்பது தெரிய வந்ததுடன், தொலைபேசி அழைப்புகளையும் பரிசோதித்து கொலைக்கு உதவியவர், கொல்லப்பட்டவரின் மனைவி, மனைவியின் தாய், தந்தை உட்பட 9 பேரை நேற்று பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன், சான்று பொருட்களான றீப்பை தடி, இரும்பு கம்பி, உலக்கை என்பவற்றையும் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை விரைவில் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-03)

## சர்வகட்சி...

அதற்கான காரணம் கடந்த காலங்களில் ஜனாதிபதியால் வாக்குறுதி அளித்த விடயங்களான நில அபகரிப்பு மற்றும் சிறைக் கைதிகள் விடுதலை போன்ற பல விடயங்களை அரசாங்கம் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை.

நாங்கள் ஏற்கனவே கேட்டுக்கொண்ட விடயங்களை உடனடியாக செய்ய வேண்டும் என்று ஜனாதிபதியிடம் மீண்டும் கோரிக்கை வைக்கின்றோம்.

தமிழ் மக்கள் சார்பாக நாங்கள் கேட்ட விடயங்கள் நிறைவேற்றப்படுமாக இருந்தால் இனிவரும் ஏனைய கூட்டங்களில் நாங்கள் கலந்துகொள்ள தயாராக இருக்கின்றோம்.

இது தொடர்பாக ஜனாதிபதியை நேரில் சந்தித்து கூற இருக்கின்றோம். ஜனாதிபதி உத்தரவிட்டும்கூட வன வளத் திணைக்களம் தங்கள் செயற்பாடுகளை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

எங்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு நில அபகரிப்புகள் நிறுத்தப்படவேண்டும். அரசியல் கைதிகளை விடுதலை செய்யப்படவேண்டும்.

ஏற்கனவே கடந்த பொங்கல் தினத்தில் யாழ்ப்பாணத்தில் வந்து வாக்களித்த 108 ஏக்கர் பொதுமக்களின் காணி இன்னும் விடுபடவில்லை. ஆகவே அதை எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் முன் வைக்கின்றோம்.

எனவே நாங்கள் வைத்த கோரிக்கைகள் காணி விடுவிப்பு மற்றும் அரசியல் கைதிகளை விடுதலை. அவை சாத்தியமாக இருந்தால் அடுத்தடுத்து கூட்டங்களில் நாங்கள் கலந்து கொள்வோம்-என்றார். (அ)

## மின்வெட்டு...

மேலும், இந்த உத்தரவை மின்சார சபை அமுல்படுத்த தவறினால், இலங்கை மின்சார சபை சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க மின்சார சபைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், நேற்றைய தினமும் முன்னரைப் போன்று மின்வெட்டு நடைமுறையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வட்டிக்கு...

றரை வருடத்துக்கு முன்னர் எடுக்கப்பட்டவை என்றும் அந்தக் குழுவுக்குள் முரண்பாடு ஏற்பட்டமையை அடுத்து அவை வெளியாகியுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-03)

# “தேர்தலுக்கு தயாரில்லை என்றால் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்!”

கொழும்பு, ஜன. 27

மார்ச் 09 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தாவிட்டால் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடையும். தேர்தலை பிற்போடும் சூழ்ச்சியை திரைமறைவில் இருந்து முன்னெடுப்பதை விடுத்து ஜனாதிபதி தான் தேர்தலுக்கு தயார் இல்லை என்பதை மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

நேற்றைய தினம் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர் உரையாற்றுகையில்,

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண மக்களாதரவு அத்தியாவசியமாகும். மக்களின் ஆதரவு இல்லாமல் அரசாங்கத்தை சிறந்த முறையில் நிர்வகிக்க முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு மக்களாணை கிடையாது. ஆகவே, அவர் எடுக்கும் தீர்மானங்களுக்கு நாட்டு மக்கள் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்க போவதில்லை.

தேர்தல் ஊடாகவே மக்கள் தமது அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியும். ராஜபக்ஷர்களின் பலவீனமான நிர்வாகத்திற்கு எதிராக மக்கள் போராட்டத்தின் ஊடாக தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். பொது தேர்தலில் மக்களால் புறக்கணிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கெர்ணடு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடுத்தர மக்களை வரி விதிப்பால் நெருக்கடிக்குள்ளாக்கி ராஜபக்ஷக்களை அருமையாக பாதுகாத்துள்ளார். இந்த அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்த இடமளிக்க வேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட ஜனாதிபதி செய்யாத சூழ்ச்சி ஏதும் கிடையாது, அனைத்து தடைகளையும் மீறி தேர்தலுக்கு தற்போது திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஆணைக்குழு உறுப்பினர் விவகாரத்தில் புது பிரச்னை தோற்றம் பெற்றுள்ளது. தேர்தலை நடத்த தோற்றம் பெறும் அனைத்து நெருக்கடிகளுக்கு பின்னணியில் ஜனாதிபதியே உள்ளார் - என்றும் கூறினார். (ஐ)

## 12 வருடங்களின்...

தில்லைராஜ் என்ற அரசியல் கைதியே இவ்வாறு, மன்னார் மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2011 ஜூன் 13 ஆம் திகதி யாழ்ப்பாணம் - மானிப்பாய் பகுதியில் மரக்காலையில் வைத்து இவரை பயங்கரவாத பொலிஸார் கைது செய்திருந்தனர். தொடர்ச்சியாக தடுத்து வைக்கப்பட்டிருந்தநிலையில், இவர் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட நிலையிலேயே இவர் குற்றமற்றவர் என்று கருதப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைக்கு பின்னர் தனது விடுதலைக்காக பாடுபட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து செய்தியாளர்களிடம் பேசிய தில்லைராஜ்,

“12 வருடம் சிறையில் இருந்து விடுதலையாகி இருக்கிறேன். என்னைப் போன்று - 25 வருடங்களுக்கும் மேலாகவும் அரசியல் கைதிகளாக சிறைகளில் என்னுடன் ஒன்றாக இருந்த பலர் இன்னும் சிறைப்பட்டு இருக்கிறார்கள். அவர்களையும் விரைவில் விடுதலை செய்து தர வேண்டும் என கண்ணீருடன் கேட்டுக்கொண்டார். (ஐ)

## காணி,...

இதில், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பேச்சு எழுந்தது. இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, “மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படும்”, என்று உறுதியளித்தார்.

இதன்போது, ஆளும் தரப்பை சேர்ந்த கட்சிகளின் தலைவர்களே கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். அத்துடன், தமது ஆதரவு இன்றி 13ஆம் திருத்தத்தை முழுமையாக செயல்படுத்த முடியாது என்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் கூறினார்கள்.

இதற்கு, பதிலளித்த ஜனாதிபதி ஏற்கனவே சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்த நிறைவேற்று அதிகாரம் போதுமானது. பாராளுமன்றின் அனுமதி தேவையில்லை என்று கூறினார்.

இந்த சமயத்தில், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன், கடந்த காலங்களில் 13ஆம் திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களை நடைமுறப்படுத்தாமல் இருப்பதற்காக காலத்துக்கு காலம் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் மற்றும் அறிவித்தல்கள் தொடர்பில் எடுத்துக் கூறினார். அவ்வாறு வெளியிடப்பட்ட கட்டளைகளை நீக்குவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறியதுடன், அது தொடர்பாக தாம் தயாரித்த ஆவணம் ஒன்றையும் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இதன் பின்னர், இனப் பிரச்னைக்கு தீர்வு வழங்குவது தொடர்பில் எதிர்வரும் பெப்ரவரி 8ஆம் திகதி இந்த விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றுக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்டும் என்று ஜனாதிபதி கூறினார்.

இந்த சமயத்தில், பேராசிரியர் திஸ்ஸ விதாரண, “கடந்த காலத்தில் இனப் பிரச்னை தீர்வுக்காக எனது தலைமையில் 127 கூட்டங்களை நடத்தி பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.”, என்று சுட்டிக் காட்டினார்.

அவருக்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதியரசர் நவாஸ் தலைமையிலான குழு அந்த அறிக்கையை பரிசீலிக்கின்றது. அதிலிருக்கும் பரிந்துரைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும். இது தொடர்பான விடயங்களும் எதிர்வரும் 8ஆம் திகதி பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் இடம்பெற்றிருக்கும் என்றார்.

மேலும், இன்னும் இரண்டு கூட்டங்களில் இனப் பிரச்னைக்கான தீர்வு எட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேசமயம், கூட்டத்தில் பங்கேற்ற தமிழ்த் தரப்பினர் உறுதியளிக்கப்பட்டபடி காணிகள் விடுவிக்கப்படாதமை தொடர்பில் தமது அதிருப்தியை வெளியிட்டனர்.

இதற்கு உறுதியளித்தபடி இனங் காணப்பட்ட 100 ஏக்கர்கள் காணிகளும் விரைவில் விடுவிக்கப்படும். சில தடங்கல்கள் காரணமாக காணிகள் விடுவிப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் காணிகள் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார்.

இதேபோன்று, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையிலான குழு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. விரைவில் 15 அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர் என்றும் மீண்டும் உறுதிமொழி அளிக்கப்பட்டது.

சர்வகட்சி கூட்டத்தில் தமிழ்த் தேசியத் தரப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புளொட்டின் த. சித்தார்த்தன், ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்கவில்லை. தமிழரசு கட்சியின் இரா. சம்பந்தன், சுமந்திரன் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் க. வி. விக்னேஸ்வரன் ஆகியோரே பங்கேற்றனர். இதேவேளை, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவும் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## இலங்கைக்கு கடன் நீடிப்பு; உறுதிப்படுத்தியுள்ள சீனா!

கொழும்பு, ஜன. 27

சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியான எக்ஸிம் வங்கி, இலங்கைக்கு கடன் நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதை சீனாவின் வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. முன்னதாக இந்த நிதியுதவி குறித்து தகவல்கள் வெளியாகியிருந்தபோதும், சீனாவின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில், இலங்கைக்கு இரண்டு வருட கால அவகாசத்தை வழங்கியதுடன், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.9 பில்லியன் டொலர் கடனைப் பெறுவதற்கான நாட்டின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாக,சீன வெளிவிவகார அமைச்சு கூறியதாக ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன் சிரமங்களையும் சவால்களையும் எதிர்கொள்வதால், இலங்கையின் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு தங்களால் இயன்ற உதவிகளை சீனா செய்து வருகிறது என்றும் சீன வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# பதவி விலகுவதாக பரவும் தகவலில் உண்மையில்லை



## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர்

கொழும்பு, ஜன. 27

தாம் பதவி விலகுவதாக வெளியாகும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

பரவும் வதந்திகளுக்கு பதிலளிப்பதற்காக காலத்தை விரயம் செய்வதில் பலனில்லை எனவும் அவர் கூறினார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகுவதால் தேர்தலை நடத்துவதற்கு தடையேற்படாது எனவும் நிமால் புஞ்சிஹேவா மேலும் கூறினார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆணைக்குழுவில் இருந்து விலகியதாக வெளியாகும் தகவல்கள் தொடர்பில் வினவிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் இதுவரை தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை எனவும் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஒரு உறுப்பினர் விலகுவதால் ஆணைக்குழுவின் கூட்டங்களை நடத்துவதற்குத் தேவையான கோரத்தை பேணுவதற்கு தடையாக இருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# தேர்தலில் பாடம் படித்த பின் தமிழரசு கூட்டமைப்புடன் இணையவேண்டும்!

## கோவிந்தன் கருணாகரம் கோரிக்கை

வவுனியா, ஜன. 27

தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஒரு பாடத்தை புகட்ட வேண்டும். அதன் பின் தலைக்கனம் இல்லாத தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணையவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

வவுனியாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2010 ஆம் ஆண்டுக்கு பின்பு அரசியலுக்கு வந்து இன்று தமிழ் மக்களுக்கும், உங்களது கட்சிக்கும், தலைமை தாங்க முயற்சிக்கும் உங்களுக்கும் விடுதலைப் போராட்டத்துக்கும் ஏதாவது தொடர்பு இருக்கின்றதா. இந்த மக்களுக்காக ஒரு நாளாவது பட்டினி கிடந்துள்ளீர்களா.

காயப்பட்ட போராளிகளின் இரத்தத்தையாவது கண்டிருப்பீர்களா அல்லது அவர்களை தூக்கியிருப்பீர்களா? மக்களுக்கான ஒரு தீர்வு வரும்போது, 100 வீதம் நிதானமாக சிந்தித்து முடிவு எடுக்க முடியாத நீங்கள் தனித் தனியாக தேர்தலை சந்திக்க சொல்கின்றீர்கள். நீங்கள் பிரிந்து செல்வதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழிந்துவிடாது.

2010 கஜேந்திரகுமார் அணி வெளியேறியபோதும், 2015 இல் ஈ.பி.ஆர்.எல்.எப். வெளியேறியபோதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூட்டமைப்பாகத்தான் பயணித்தது.

இன்று தமிழரசுக் கட்சி வெளியேறுவதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழிந்துவிடாது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பெயரை மற்றவர்கள் பயன்படுத்தக் கூடாது எனக் கூறுகின்றீர்கள்.

ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அப்படி கூறவில்லை. சுரேஷ் பிரேமச்சந்திரன் அப்படி கூறவில்லை. ஆனால் எப்படி உங்களால் கூற முடியும். நாங்கள் முக்கியமான தீர்வை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம். இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி தவிக்கிறது. சர்வதேசத்தின் உதவியை நாடியிருக்கின்றது.

இந்தியா பெரும் அழுத்ததை கொடுக்கிறது. 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றுமுழுதாக அமுல்படுத்தி மாகாண சபைத் தேர்தலை நடத்த அழுத்தம் கொடுக்கிறது. மெல்ல மெல்ல இலங்கை அரசு அதை நோக்கி நகர்கின்றது.

எங்களுடன் பேசுவதற்கான காலங்கள் கனிந்து வருகிறது. நாங்கள் பிரியக்கூடாது. ஒற்றுமையாக இருக்க வேண்டும். தேர்தலின் பின் இணைந்து செயற்படுவோம் என்கிறார்கள்.

அதில் எந்த பிரச்னையும் இல்லை. ஆனால் தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஒரு பாடத்தை புகட்ட வேண்டும். அதன் பின் தலைக்கனம் இல்லாத தமிழரசுக் கட்சி தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணையவேண்டும்-என்றார். (அ)



## பலாலி காணி சுவீகரிப்புக்கு நட்டஈடு பதிவுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் விமான நிலைய விஸ்தரிப்புக்கு சுவீகரிக்கப்பட்ட காணி உரிமையாளர்களுக்கான நட்டஈட்டு தொகை வழங்குவதற்கான பதிவு செய்யும் செயற்பாடு நேற்று தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் காணிப் பிரிவில் ஆரம்பமாகியுள்ளன.

காணி உறுதிப் பத்திரம், தோம்பு, வங்கி கணக்கு புத்தகம், தத்துவ உரித்தாளர் சத்தியக்கடதாசி முடித்த படிவம் , தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் வருகை தந்து குறித்த காணி உரிமையாளர்கள் பதிவு செய்ய முடியும்.

மேலும் குறித்த காணி உரிமையாளர்களுக்கான கடிதமும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. (அ)

## கட்டுத்துப்பாக்கி வெடித்து ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 27

தென்மராட்சி - மிருசுவில் பகுதியில் கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

தான் தயாரித்த கட்டுத்துப்பாக்கியை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்றபோது, அது வெடித்ததில் 34 வயதுடைய குடும்பஸ்தர் படுகாயமடைந்தார்.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டபோதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.



## பொதுநலவாய செயலாளர் அடுத்த வாரம் இலங்கைக்கு

கொழும்பு, ஜன.

பொதுநலவாய செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லண்ட் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என பொதுநலவாய செயலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தின விழாவில் கலந்துகொள்வதற்காக செயலாளர் நாயகத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் அவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அந்த வகையில் நாட்டுக்கான ஐந்து நாள் பயணத்தில், அவர் ஜனாதிபதி விக்கிரமசிங்கவை மரியாதை நிமித்தமாக சந்திக்கவுள்ளார்.

அத்துடன் பெப்ரவரி 3 திகதியன்று, கடல்சார் சிந்தனைக் களஞ்சியமான புவிசார் அரசியல் வரைபடத்தில் அவர் விரிவுரை ஆற்றவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தனது விஜயத்தை முடித்துக்கொண்டு பெப்ரவரி 5 ஆம் திகதி நாட்டைவிட்டு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வாக்குசீட்டு அச்சிடும் பணி ஆரம்பமானது!

கொழும்பு, ஜன. 27

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணிகள் மாவட்ட ரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிக்கிறது. தேர்தலை நடத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை தேர்தல்கள் ஆணைக்குழு தயாரித்து, அச்சிடுவதற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், வாக்குச் சீட்டுகள் அச்சிடுவதற்கு தயாராக உள்ளதாக அரசாங்க அச்சக திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கு தேவையான கடதாசிகள் அரசாங்க அச்சக திணைக்களத்திடம் போதுமானளவு கையிருப்பில் உள்ளன என்று அரசாங்க அச்சக திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.